REGD M [illegible]

...தா விபரம்
—
...ஆண்டு ரூ 7,
,, 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 2–10–49 | இதழ் 14

:: மாஜி கடவுள்கள் ::

6.

★ ★

:: லாக் தேவன் ::

★ ★

நெருங்கும் ஆபத்து

"ஆறுநாடுகளின் பிரதிநிதிகள் கலந்துபேசவேண்டும். கீழ்நாட்டுப் பிரதிநிதிகள் இருவர், ஐரோப்பிய நாடுகளைச்சேர்ந்த இருவர், ஸ்டாலின், ட்ரூமன் ஆகியோரடங்கிய ஒரு மாநாடு நடைபெறுதல் அவசியம், அப்போது ஆபத்தைத் தவிர்க்கமுடியும்" என்று ஐக்கியநாடுகளின் கல்வி, விஞ்ஞான, கலாச்சாரமாநாட்டின் 4-வது பாரிஸ்கூட்டத்தில் இந்தியப்பிரதிநிதியும், மாஸ்கோ அரசியல் தூதருமான சர். எஸ். ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

ஆபத்து என அவர் குறிப்பிட்டது, உலகம் உருண்டுகொண்டு, மீண்டும் போர்ப்பாதையில் விழுந்துவிடுமோ என்ற அச்சம், எங்கும், பரவிவருவதன் எதிரொலி தான். மறைக்கமுடியாத விஷயம்; மறந்துவிடமுடியாத் பிரச்னை!

உலகம் இன்று இரண்டுகூடாரங்களாகி நிற்கிறது. ஒன்றுமுதலாளித்துவம்— இன்னொன்று பொதுவுடைமை; அதாவது அமெரிக்கா—ரஷ்யா.

பொதுவுடைமை மணம்பரவி வருதல் முதலாளித்துவ நாடுகளிடையே அச்சத்தையும், பீதியையும், பெரும் வேதனையையும் உண்டாக்கியிருக்கிறது. முதலாளித்துவ நாடுகளின் முதல்வரிசையில் நிற்கும் அமெரிக்கா, பரவிவரும் பொதுவுடைமையைக்கண்டு, அதை எதிர்த்து,முறியடிக்கும், மும்முரமான ஏற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது இரண்டாவது உலகப்போர் முடிந்தநாள் முதல். ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளும் அமெரிக்கக்கூடாரத்திலேயே தங்கி ஆதரவுபெற்று வருகின்றன.

ஏழ்மை, இல்லாமை, தரித்திரம், முதலாளித்துவ அட்டகாசம் பரவிக் கிடக்கும் இடங்களில், ஆங்காங்கு, பொதுவுடைமை, பொங்கி எழும்பிக் கொண்டிருக்கிறது. ஆசிய நாடுகளான சீனு, இந்தோசீனு, பர்மா, மலேயா, பொதுவுடைமைக் கூடாரம் பக்கம் சாய்ந்து கொண்டிருக்கும் நாடுகள்.

இந்த நிலை, முதலாளித்துவக் கூடாரத்தில் அதிர்ச்சியையும், அச்சத்தையும் அதிகரிக்கச் செய்திருக்கிறது.

முதலாளித்துவத்தின் உச்சாணிக் கிளையில் இருக்கும் அமெரிக்காவோ, ரஷ்யக் கொள்கைகள், வெகுவேகமாக விரைந்து பரவுதலைக் கண்டு, கிலி கொள்ள ஆரம்பித்திருக்கிறது. இந்தக் கிலியின் விளைவாக, ரஷ்ய மணம் பரவாமல் தடுக்க, என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளை மேற்கொள்வதில், முயன்று, முனைந்து கிடக்கிறது.

ஐரோப்பிய நாடுகளையும், ஆசிய நாடுகளையும் தன் கூடாரத்தில் திரட்டிவைக்க ஆவன செய்து வருகிறது—ஆசை வார்த்தைகள், பணவுதவி என்பவைகள் மூலமாக.

இந்த எண்ணத்தின் எதிரொலிதான் மார்ஷல் உதவி, ஆசிய நாடுகளுக்கு உதவி என்ற திட்டங்கள்.

இரண்டாம் போர்ப் புயல் காரணமாகச் சீர்கெட்டுக் கிடக்கும் ஐரோப்பிய— ஆசிய நாடுகளை 'இந்த ஆசைத் திட்டங்களைக் காட்டி' தன் கூடாரத்தில் இழுத்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டு, வெற்றியும் கண்டு வருகிறது அமெரிக்கா.

"உதவி" என்ற பெயரால் மட்டுமல்ல, அந்தந்த நாடுகளின் முதலாளித்துவ அரசாங்கங்களுக்கு ரஷ்யமணங்கண்டு, அச்சம் அதிகமாகியிருப்பதால், அவைகளை ஒரு கூட்டு முன்னணியாக அமைத்தும் வருகிறது. இந்த முயற்சிக்கு முன்னேடும் பிள்ளையாக இருப்பது பிரிட்டன்.

இதன் விளைவுகள்தான் ஐரோப்பியக் கவுன்சில், என்ற ஒரு ஏற்பாடாகும். ஆதிபத்திய நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு பார்லிமெண்ட் என்று இதற்குப் பெயரிட்டு அழைக்கப்பட்டாலும், இதன் முக்கிய நோக்கம் ரஷ்யக் கூடாரத்துக்கு எதிரிடையாக ஒரு முன்னணி இருக்கவேண்டும் என்பதுதான்.

'உலக சமாதானம்' என்ற முழக்கத்தினூடே, போருக்குப் பின் ஐக்கிய நாடுகளின் சபை [United
ions, Assembly] ஏற்படுத்தப்
இன்னும் நீடிக்கிறதென்றாலும்,
ஒரு பெருமைக் கூடமாக,
மேடையாக, இருக்கிறதே
எதிர்பார்த்த பலன்கள்
வில்லை! எதிரிடையாகக் கருத்து
றுமைகளும், கலவர எண்ணங்
பரவவே வழி தந்து வரு
ஐ. நா. சபை, அமெரிக்க—
கூடாரங்களின் 'பலப் போ
பார்க்கும் இடமாக இருந்
கிறது.

* * *

உலக சமாதானத்தையே
இலட்சியமாகக் கொண்ட
நாடுகள் சபையின் நான்
கூட்டம் பிளஷிங் மெடோவி
20-ந் தேதி ஆரம்பமாகியுள்
இடம் நியுயார்க்குக்கு அருகி
தாகும்.

பிலிப்பைன்ஸ் பிரதிநிதி ஜே
கார்லோஸ் ரோமுலோ தலை
துவங்கும் இக்கூட்டத்தில் பிரி
வெளிநாட்டு மந்திரி பெவின்,
ரிக்க வெளிநாட்டு மந்திரி ஆ
ஆகியோர் மட்டுமின்றி ரஷ்ய
நாட்டு மந்திரி விஷின்
கலந்து கொண்டுள்ளனர்.
கூட்டத்தில், ரஷ்ய வெளி
மந்திரி விஷின்ஸ்கி பேசிய
ரஷ்யாவின் சமாதான ஆர்வ
பிரதிபலித்துள்ளது.

"சோவியத் அரசாங்கம்
நாடுகள் சபைக்கு கட்டுப்
என்பதை நாங்கள் உணர்
உலக அமைதி, சர்வதேச
காப்பு ஆகியவைகளை அமு
ஐக்கிய நாடுகள்சபை முக்
கருவியாகும் என ஸ்டாலின்
யுள்ளார்" என்பதாகக் குறி
ஐ. நா. சபையின் அவசியம்
எடுத்துக் சொல்லியுள்ளார்.

ரஷ்யாமீது, முதலாளித்
ரசுகளுக்குள்ள குரோத எ
தையும், ரஷ்யா அது
பெருந்தன்மையுடன் கா
மனப்பான்மையும் விஷி
யின் பேச்சில் தொனிக்
முதலாளித்துவ முகாமிகள்
மையில் 'பொதுவுடைமை
மிரள்கின்றனர்—தங்கள் பே

(12-ம் பக்கம் பார்

திராவிட முன்னேற்றக் கழகம்

அண்ணாத்துரை அறிக்கை

ஆயிரம் தவறுகள் இருக்கட்டும், அதற்காக ரை எதிர்த்துப் பேசிக்கொண்டிருப்பதும், அவரு தலைமையை ஒழிக்கப் பிரசாரம் செய்வதும், அவ தலைமைப் பதவியிலிருந்து வெளி ஏற்றுவதும், , முறையா, அழகா!

அவர் சுபாவம் நமக்கெல்லாம் தெரிந்ததுதானே— து கொள்வார்—குறை கண்டுபிடித்தபடி இருப் —எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுவார்— ல்லாம் அவர் சுபாவம். அதற்காக நாம் அவரைத் மைப் பதவியிலிருந்து நீக்கும் போராட்டத்தில் ஈடு தா? அவரைத் தலைமைப்பதவியிலிருந்து ஒழிப்பது ர் மனதுக்குத் தாங்கமுடியாத வேதனையையல்லவா ம். நாமா அந்த வேதனையை அவருக்கு உண்டாக் து? எப்படியோ போகட்டும்—ஏதோசொல்லுகிறார் வத்தினால்—அவரை அவர் போக்கிலேயே விட்டு வது தானே நல்லது—ஏதோ நாம் நமக்கு ஏற்ற விலும் முறையிலும் 'வேலை' செய்வோம், அவரு ப தலைமையை 'ஒழிக்கும்' வேலையை விட்டு டு.

நமக்கென்ன கொள்கைதானே முக்கியம்—அந்தக் ள்கைகளை நாட்டிலே பரப்ப வேண்டியதுதானே கியம்—அவருடன் தகரார் செய்துகொண்டு, ள்கையைப் பரப்பும் காரியத்தைக் கவனிக்காமல் க்கலாமா — அழகா — பொறுப்புணர்ச்சியுள்ளவர் இப்படி இருக்கலாமா — அவருடைய போக்கு க்கவில்லை என்றால், அவரை மறந்து, அவருடன் ப் பணி புரிவதை விட்டுவிட்டுத் தனியாகக் ள்கைகளைப் பரப்பும் காரியத்தில் ஈடுபடுவதுதான் ற, அறம், தேவை.

தலைவராக அவர் இருப்பதால் வேலை செய்யத் டயாக இருக்கிறது, அவருடைய தற்போதைய க்குப் பிடிக்காததால், என்பதையே கூறிக்கொண்டு, யாற்றாது இருப்பது, வைதீகத்துக்கும் சர்வாதி ஆட்சி முறைக்கும் வலிவு தேடுவதற்குத் தானே ன்படும். அவருடன் மோதிக்கொள்வது, எதிரிக்குத் ன இனிக்கும்! எனவே, பணியாற்றாது இருப்பதும் து நஷ்டம், அவருடன் போரிட்டுக் கொண்டிருப் ம் வீண்வேலை; எனவே, கொள்கை பரவவேண்டும், க்கால முதற்கொண்டு நாட்டிலே இருந்து வரும் தாயக் கொடுமைகள் ஒழிக்கப்பட வேண்டும், அரசி ஆதிக்கக்காரர்களின் அட்டகாசத்தைப் போக்க ண்டும், ஜாதிமத பேதக் கோரத்தாண்டவத்தைப் க்கவேண்டும், இப்படிப்பட்ட முக்கியமான வேலை உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய பிரச்னை மக்களின் வாழ்வை வதைத்துவரும் பிரச்னைகள் ளன, இவைகளைக் கவனிக்கவேண்டும், இந்த வேலை தொடர்ந்து நடைபெறவேண்டும், எனவே, வீண்வேலை யாகிய, வீம்பாகிய, தலைமை ஒழிப்புக்காரியத்திலே நாட் டம் செலுத்தாமல், அவரை அவர் போக்கின்படியே விட்டுவிட்டு, கொள்கைகளைப் பரப்பும் அரும் பணி யினை மேற்கொள்ளவேண்டும், உடனே.

* * *

பல நண்பர்கள் கொள்கையில் ஆர்வமுள்ளவர் கள், இதுபோலக் கூறினர், நேரிலும், கடிதமூலமாகவும், இந்தக்கருத்து ஒருபுறம் வந்து குவிந்தவண்ணம் இருந் தது. அதேபோது......

"பெருவாரியாக நாம் இருக்கும் போது ஏன் நாம் விலகவேண்டும்? கழகத்தை நாம் நடத்திச் செல்வோம்" என்ற கருத்தை, ஆர்வத்துடன் வழங்கி, அந்தக்காரி யத்துக்கான ஆற்றலையும் சுட்டிக்காட்டிப் பலர் கடித மூலமும் நேரிலும் தெரிவித்துவந்தனர். வேறு சிலரோ......

"இது அண்ணாத்துரையின் சூழ்ச்சி. அவன் மிக மிக முன்னேற்பாட்டுடன் திட்டம் தயாரித்திருக்கிறான். பலமுறை ஒத்திகை நடத்திப் பார்த்து, இப்போது படை எடுக்கிறான் பெரியார் மீது. கழகத்தைக் கைப் பற்றி அதற்கென உள்ளசொத்தைக் கைப்பற்றி, ஆதிக் கம் செலுத்த விரும்புகிறான். அரசியல் சூதாடிகளுடன் கூடிக்கொள்ள எண்ணுகிறான்—கொடியவன்—கபடன், கயவன்—சுயநலக்காரன், — சூழ்ச்சிக்காரன் — அவன் திட்டம் பெரியாரை ஒழிப்பது என்பதுதான்—அதற் குக் காரணம் பொறாமை—" என்று தீட்டினர் ஏடுகளில், திண்ணைப் பிரசார மூலமும் பரப்பி வந்தனர். இது மட்டுமன்றி,

"திராவிடர் கழகத்திலே ஒரு திடீர்க் குழப்பம் ஏற்பட்டு விட்டது — பிளவு அகன்ற வாய் திறந்து கொண்டிருக்கிறது—அவர்கள் ஒருவரை ஒருவர் தாக் கிக்கொண்டு அழிந்து போய்விடுவார்கள்—திராவிடர் கழகத்தின் மூலம் நாட்டிலே பரப்பப்பட்டு வந்த கொள்கைகள் இனிப் பரவ இடமில்லை—எனவே நமது ஆதிக்கம் ஆட்டம் கொடுக்காது, புத்துயிர் கிடைக்கும்" என்று வைதீக வட்டாரமும், காங்கிரஸ் முகாமும், பேசிக்கொண்டிருந்தன. அமைதியையும் தனிப் போக் கையும் விரும்பும் என்போன்ற ஒரு சிலர் "உனக்கேன் பாரம்—பிரச்னை—தனியாக ஒதுங்கிவிடு - அந்த நிலையி லிருந்து முடிந்ததைச் செய்—முடியாவிட்டால் செய் பவர்களைக்கண்டு மகிழ்ந்திரு—" என்றும் கூறினர்.

இப்படிப் பல கருத்தலைகள் தாக்கும் நிலையில் இருந்த நான், பல நாட்கள், இந்தப் பிரச்னைகளைப்பற்

கருத்தலேகள் ஐந்து கிளம்பின

கண்ணியமான ஏற்பாடு

றிச் சிந்திக்கவும், கலந்தாலோசிக்கவும், வேண்டியவனுனேன்.

நான், என்வரையில் ஒரு முடிவுக்கு வருவது மட்டும் பிரச்னேயாக இருந்தால், சுலபத்திலும், விரைவிலும், முடிந்திருக்கும். விலகிவிட்டிருப்பேன். அது எனக்குப் பழக்கமானதுங் கூட!

இம்முறையோ, நான் கழகத் தோழர்களிலே மிகப் பெரிய குழுவின் சார்பாக ஒரு முடிவுக்கு வரவேண்டியவனுனேன்.

ஏறத்தாழ ஐந்து வகையான கருத்தலேகள்—இவைகளுக் கிடையே நான்—ஆயிரக்கணக்கான தோழர்களின் கருத்தை ஒட்டியதாகவும், உருவாக்குவதாகவும் அமையவேண்டிய பொறுப்புள்ள முடிவு எடுக்கவேண்டியவனுனேன். சாதாரணப் பிரச்னேயல்ல. என் வாழ்க்கையில், இரண்டாவதாக நான் எடுக்கவேண்டிய முடிவு.

1935-ம் ஆண்டு என் வாழ்க்கையில், 'முதல் முடிவு' எடுக்கும் வாய்ப்புக் கிடைத்தது—அதாவது, பட்டம் பெற்றதும் உத்தியோகத்துக்குப் போவதில்லே—பொதுவாழ்வுத் துறையிலே பணியாற்றுவது என்று நான் துணிந்து மேற்கொண்ட முடிவு. அந்த ஆண்டிலிருந்து 1949 வரையில், எனக்கு,மீண்டுமோர் முடிவு கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டதில்லே. பாதை தெரிந்து விட்டது—போய்ச் சேரவேண்டிய இடமும் தெரிகிறது, எனவே, பயணம் செய்யவேண்டியதுதானே—அம்முறையில், இந்தப் பதினுன்காண்டுகளும், எனக்கு அமைந்திருந்தன. இடையே சங்கடங்களும் சஞ்சலங்களும் ஏற்படாமலில்லே — ஆனுல், அவை, என் முதல் முடிவை மாற்றவேண்டிய அளவும் அல்ல, அந்த வகையும் அல்ல. எனவே சங்கடம் ஏற்பட்டபோதும், சஞ்சலம் உண்டானபோதும், 'எதையும் தாங்க இந்த இதயம் உண்டு' என்ற கவிதா வாக்கியத்தின்படி, இருந்து வந்தேன். இயக்கத்திலேயும் பெரியாரிடமும் எனக்கு இருந்துவந்த தொடர்பு, சாதாரணமானதாக இருந்திருந்தால், சஞ்சலம் சிறிதளவு ஏற்பட்டபோதே விரண்டோடி விட்டிருப்பேன். ஆனுல் பதினுன்காண்டுத் தொடர்பு, ஏற்படுத்திவிட்ட 'பற்றும் பாசமும்' இலேசானதல்ல. என் மனம் சுலபத்திலே சபலமடையக் கூடியதாக இருந்திருந்தால், கட்சி விட்டுக் கட்சி தாண்டும் காரியத்தில் தள்ளப்பட்டிருப்பேன். சபலமோ, பதவியின்மீது மோகமோ, இல்லாதவனுக இருந்ததால்தான், எவ்வளவு இடிபட்டாலும் இடர்ப்பட்டாலும், இதே கட்சியிலேயே, முடியும்போது முன்னணியிலும், முடியாத சமயங்களில் வேலி ஓரத்திலும் இருந்துகொண்டு வந்திருக்கிறேன். பல முறை, என்போக்கு எப்படி ஆகிவிடுமோ என்று பயந்தவர்களும், அவசர ஆரூடம் கூறியவர்களும் உண்டு. ஏதேனும் மாறுபாடு காரணமாக நான் ஒதுங்கியிருப்பேன் சில சமயங்களில்—உடனே, என்னேக் காங்கிரசார் விலேக்கு வாங்கிவிட்டனர் என்றும், நான் மந்திரியாகி விட மனப்பால் குடிக்கிறேன் என்றும், பிரசாரம் செ[ய்த]வர்—நம் இயக்கத் தோழர்களிலேயே சிலர். ஆனு[ல்] நான் கட்சியிலே ஈடுபட்டு, முன்னணியிலிருக்கு[ம்] போதெல்லாம் இதே தோழர்கள், "எங்கள் அண்ண[ா] மட்டும், பதவி மோகம் கொண்டவராக இருந்திருந்தா[ல்] ஒரு மந்திரி வேலே அவரைத் தேடிக்கொண்டு வராதா—அவர் மட்டும் காங்கிரசில் இருந்தால், அவர் எவ்வள[வு] பெரிய பதவியில் இருப்பார் தெரியுமோ?" என்[று] புகழ்வார்கள். அந்தப் புகழ்ச்சிக்கும் பொருள் இல்[லே] அன்பு என்பது தவிர, அவசரப்பட்டு வெளியிடு[ம்] கண்டனத்துக்கும் பொருளில்லே, காரணமற்ற வெறுப்[பு] என்பது தவிர; இப்படித்தான் நான் என்னே[த் தேற்றிக்] கொண்டு என் மனதைச் சமாதானப்படுத்திக் கொ[ள்]வது வழக்கம். ஆனுல் எந்தச் சமயத்திலும், வே[று] கட்சி போய்விடுவது என்ற எண்ணம் எழும்பியே இல்லே—கட்சியே வேண்டாம்—கட்சியின்றியே பொ[து] நலத் தொண்டு செய்ய முடியும் என்று எண்ண[ம்] பிறந்ததுண்டு—சில சமயங்களில் பொதுவாழ்க்கை[யே] வேண்டாம் என்றுகூடத் தோன்றியதுண்டு, ஆனு[ல்] ஒருநாளும், வேறு கட்சிக்கு ஓடிவிடுவது என்ற எண்ணம் ஏற்பட்டதில்லே. இந்நிலேயில் உள்ள நான், ஐந்[து] வகையான கருத்தலேகளேயும் தாங்கிக்கொண்டு, ஒவ்வொரு யோசனேயையும் சீர்தூக்கிப் பார்த்து, த[க்க]தோர் முடிவுக்கு வரவேண்டியவனுனேன். எத்தகை[ய] 'முடிவு' எடுப்பதானுலும், கொள்கைக்குக் குந்தக[ம்] ஏற்படாததாக இருக்கவேண்டும். உண்மையிலேயே உள்ளம், உலேக்கூடம் போலாகிவிட்டது—சிந்தனேக்கு நிரம்ப வேலே ஏற்பட்டு விட்டது—சங்கடமான வே[லே].

வாழ்க்கையின் பல கட்டங்களிலே, முக்கியமா[ன]தோர் கட்டத்தருகே வந்து நின்றேன்—நான் மே[ற்]கொள்ளும் முடிவு, என்னே மட்டுமல்ல, பல ஆயிர[க்]கணக்கான தோழர்களேயும் சார்ந்ததாகும் என்ப[து] எனக்குத் தெரியுமாதலால், பொறுப்பு மேலும் அ[தி]கரித்தது.

இன்னெரு கட்சிக்குச் சென்று தீர்த்துக்கொள்[ள]லாம் என்று பசியுடன் இருக்கும் நிலே அல்ல, எனக்[கு] திராவிடர் கழகத்தில் இருந்த நிலே—அதுபோல[வே] பலருக்கும், மிக முக்கியமான இடம் இருந்தது கழக[த்]தில். நடுநாயகங்களாக இருந்த நண்பர்கள், என்[னே] விட அதிக ஆண்டுகள் தலேவருடன் கூடிப் பணியா[ற்]றினவர்கள், புதியதோர் போக்குக்கொள்ள வேண்[டி]யவர்களானுர்கள். வாழ்நாளில் ஏறத் தாழப் பதின[ான்]தாண்டுகள் ஒரு கழகத்திடம் தொடர்பு கொண்டிரு[ந்]தவர்கள், அந்தத் தொடர்பை அறுத்துக்கொள்வ[து] என்றுல், சுலபமா, சுவை தரக் கூடியதுதானு, வி[ளே]விலே முடியும் காரியந்தான் ஆகுமா? நானுவ[து] பதினுன்கு ஆண்டுகள்—பல நண்பர்கள் உளர், பெரி[யாரு]டன் ஒன்றுகக் காஞ்சிபுரம் மாநாட்டிலே எழு[ந்]திருந்து வெளியே வந்தவர்கள், காங்கிரசை விட்[டு]

(13-ம் பக்கம் பார்க்க)

மாஜீ கடவுள்கள்

"வம்புக்காரன்! வல்லடி செய்பவன்! கலகக்காரன்! கெட்ட எண்ணக்காரன்! போக்கிரி! ஒருவரையும் வாழவிடமாட்டான்! ஒன்றல்ல இரண்டல்ல அவன் செய்த அக்ரமங்கள்!"

"யாரைக் குறித்து இவ்வளவு கண்டிக்கிறாய்?"

"அதோ போகிறானே அந்த அனியாயக்காரனைப் பற்றித்தான் சொல்கிறேன்."

"யாரை! அதோ போகிற ஆசாமியையா? இப்போதுதானே அவனிடம் அன்பாகப் பேசினாய்—அடக்க ஒடுக்கமாக இருந்தாயே! அவர், இவர் என்று மரியாதையாகப் பேசினாயே!"

"ஆமாம்! வேறே என்ன செய்வது! அவன் அக்ரமக்காரன்தான், நமக்கு ஏன் அவனுடைய பொல்லாப்பு என்பதற்காகத்தான் அவன் எதிரே, மரியாதையும் அன்பும்காட்டினேன், பாவனைக்கு"

"அப்படியா விஷயம்! அவனிடம். பயம் என்று சொல்லு!!"

"ஆமாம்! அவன் படுபாவியாயிற்றே, பயப்படாமல் என்ன செய்வது"

* * *

இப்படிப்பட்ட உரையாடல் கேள்விப்பட்டிருப்பீர்கள், ஊர்ப் போக்கிரியைப் பற்றி. போக்கிரியிடம் சிக்கிக் கொள்வானேன் என்பதற்காகவே, அவனிடம் மரியாதை காட்டுவர், சற்று முன் ஜாக்ரதையும், பயங்கொள்ளித்தனமும் உள்ளவர்கள். மனிதர்கள் விஷயமாக இப்படி நடந்து கொள்வதே, மானக்குறைவு என்றும், கேலிக்குரியது என்றும் எண்ணுவர் பலர். சில கடவுள்கள் விஷயமாகவே இப்படிப்பட்ட 'போக்கு காட்டினர், பக்தர்கள்!

* * *

அக்ரமக்காரக்கடவுள்! கொலைக்கு அஞ்சாத கொடியவன்! கலகமூட்டுவதையே தொழிலாகக் கொண்ட கடவுள்!—இப்படியும் ஒரு கடவுள் உண்டு, டியூடானியருக்கு; — சனி பகவான்—நாரதர், இல்லையா நம் நாட்டவருக்கு, அதுபோல. அடுத்துக் கெடுத்தல், அக்ரமத்துக்கு உடந்தையாக இருப்பது—அகப்பட்டதைச் சுருட்டுவது ஆகிய 'திருக்கலியாணகுணங்கள்' கொண்ட தேவனும் உண்டு — அவனுக்கும் தேவாலயம் உண்டு—போக்கிரியிடம் புன்சிரிப்புடன் பேசித் தப்பித்துக் கொள்வதுபோல, இந்த அக்ரமத் தேவனுக்குப் பூஜை செய்து, அவனுடைய கோபத்திலிருந்து தப்பித்துக்கொள்வர், டியூடன் பக்தர்கள். கடவுள், அன்பின் ஊற்று, அன்பின் உருவம், அன்பு வேறு கடவுள் வேறு அல்ல, என்பதெல்லாம், கடவுட் கொள்கையில் 'நாகரிகம்' புகுந்த பிறகு, தீட்டப்பட்ட தத்துவங்கள். பழங் காலக் கோட்பாட்டின்படி, கடவுளரிலும், 'கெட்டவர், நல்லவர்' உண்டு; பக்தர்கள், இருவகையினரையும் பூஜித்தாக வேண்டும், அதுதான் ஆத்திகம், மதம். இப்படி இருக்கக்கூடாதே,கடவுளின் இலட்சணம் இதுஅல்லவே என்று பேசுபவன், நாத்திகன், மதவிரோதி!

வாயில் மூக்கில் இரத்தம் வந்துவிடும்—மரம்போல முறித்துக் கீழே போட்டுவிடுவாள்—கண் குருடாகிவிடும்—வாய் அடைத்துப் போகும்—இன்ன தெய்வத்தின், கோபம் கிளம்பினால், என்று இப்போதும், பட்டிக்காட்டவர் பேசுகிறார்களல்லவா! அதுபோன்ற நிலை, டியூடன் மக்களுக்கு; முன்பு இருந்தது; இப்போதல்ல! அந்த இருட்டறையிலிருந்து அவர்கள் வெளியேறி, பகுத்தறிவுப் பகலவன் உள்ள பரந்த வெளிக்கு வந்துவிட்டனர்.

இருட்டறையில் அந்த மக்கள் இருந்தபோது, முழுமுதற் கடவுள் ஓடின், அவன் குமாரன் தார், எனும், அதிசூரர்களை, அண்டத்தை ரட்சிக்கும் காவலர்களைப் பூஜித்ததுடன், கேடு செய்யும் கடவுளையும் கும்பிட்டுத்தான் வந்தனர். லாக் தேவன் அப்படிப்பட்ட, அக்ரமக் கடவுளரில் ஒருவன்—ஓடினுக்குத் தம்பி-தார்தேவனுக்குச் சிற்றப்பன்.

சிண்டு முடிந்து விடுவதுதான் லாக் தேவனுக்குப் பொழுது போக்கு.

மானிடர், மனதிலே மாசும் தூசும் நிரப்புவான்—அதுமட்டுமா! கடவுளர் உலகிலேயே, கலகமூட்டிவிட்டு வேடிக்கை பார்ப்பான், இந்த லாக்!

லாக்கின் அக்ரமச் செயல்களால், கடவுளர்உலகே அடிக்கடி அவதிக்கு ஆளாகுமாம்.

காட்டு ஜாதித் தலைவர்களுக்குள் மூண்டுவிடும் பொறாமை உணர்ச்சி, கடவுளர் உலகிலும் இருந்திருக்கிறது-புராணத்தின்படி. லாக்தேவனுக்கு, ஓடினின் கீர்த்தியும், தார் தேவனின் செல்வாக்கும், தனக்கு ஏன் வரக்கூடாது என்ற எண்ணம், ஏற்பட்டது. அவர்களுடன் குலவிக் கொண்டே, இதற்கான திட்டமிடுவான்—தோற்பான் — தண்டிக்கப்

படுவான்—மீண்டும் முணுமுணுத்துக்கொண்டே, அதே அக்ரமத்திலேயே ஈடுபடுவான். இப்படி ஒரு கடவுள்! இதற்குப் பக்தி, பூஜை, பாசுரம், தேர் திருவிழா.

கேடு செய்வதையே குணமாகக் கொண்ட இந்த லாக்தேவனைக் கொண்டு, கடவுளர் உலகின், பரம்பரைப் பகைவர்களான, ஜோடுன்கள், பழி தீர்த்துக் கொள்ளத் தீர்மானித்து, மூன்று ராட்சசப் பெண்களை அனுப்பினர், கடவுளர் உலகுக்கு. இந்த மூவரும் மாயா ஜாலத்தினால், ஓரே உருப் பெற்று, தேவர் உலகு வந்தடைந்து பணிப் பெண்ணாக அமர்ந்தனர்!

இந்த மாயாவதிமீது லாக்தேவனுக்கு மையல்! பிறகு கேட்கவேண்டுமா! அந்த மைவிழியாள், லாக்கின் மனதிலே ஏற்கனவே மூண்டுகிடந்த கெட்டஎண்ணங்களை, மலை உருவாக்கினாள், —அலை என ஓயாது கிளம்பியபடி இருக்கச்செய்தாள்.

ஜோடுன் தலைவனுக்கு, தேவலோகத்திலிருந்த அழகானஒரு பெண்கடவுள்மீது மோகம் பிறந்துவிட்டது —அந்தப் பெண்கடவுளை எப்படியாவது, மயக்குவது என்பது இந்த மாயாவதிக்கு, ஜோடுன்கள் விதித்த கட்டளை. பெண் கடவுளின் பெயர் பிரஜீயா! கடவுள் உலகிலே கூடப் பாபம், பெண்களுக்கு, இந்தப்பேராபத்து இருக்கத்தான் செய்கிறது!!

கடவுள்கள் தமது "லோக"த்துக்குப், பகைவர்களால் ஆபத்து நேரிடாதபடி இருக்க ஒருபலமான மதிற்சுவர் கட்டவிரும்பினர்! கடவுளருக்கா இந்த யோசனை பிறந்தது, விசித்திரமாக இருக்கிறதே என்று கேட்கத்தான் தோன்றும், இப்போது. அப்போது, இவ்வித எண்ணம், தூய்மையான ஆத்திகமாகக் கருதப்பட்டது! இப்போதும் நம் நாட்டிலே, அனுமார் வால்கோட்டை கட்டியது — அணிலின் முதுகை இராமர் தடவிக்கொடுத்தது—ஆகியவைகளை நம்ப மறுப்பவனை நாத்திகன் என்று கூறிடும் நல்லறிவாளர்கள் (!) உள்ளனரே! ட்யூடன்மக்கள், அறிவுபெறாத காலத்திலே நம்பினர் இதுபோல.

ஜோடுன் ராட்சசன் ஒருவன், சித்திரக்குள்ளன் வடிவத்திலேவந்தான், அந்த மதிற்சுவர் கட்ட. அவனுடைய நிபந்தனைகளைக்கேட்டுக் கடவுளர்களுக்குக் கோபம் வந்தது — விரட்ட எண்ணினர். விஷமத்தனத்தை விருதாகக்கொண்ட லாக்தேவன்தான், தந்திரமாக, கடவுளர்களை, மாயக்குள்ளனின் ஏற்பாட்டுக்கு இசையச்செய்தான். அவன் கேட்ட நிபந்தனைகளோ, கடவுளரின் கண்களைக் கோபத்தால் சிவக்க வைத்துவிடக்கூடியவை. கட்டழகி பிரஜியாவை அவன் காணிக்கையாகக்கேட்டான் அதுவும் போதாதென்று, சூரியனையும் சந்திரனையும், தந்துவிடவேண்டுமென்றான்.

கடவுளரிடம், கலகக்கார லாக், இந்த மாயாவி, நாம் குறிப்பிடும் காலத்திற்குள் மதிற்சுவரைக் கட்டமாட்டான், எனவே அவனை நாம் தண்டிக்கலாம், பிரஜியாவை இழக்க வேண்டிய நிலைமையே உண்டாகாது என்று தந்திரமாகக்கூறி, ஏமாற்றினான்! ஒருகடவுள் ஏமாற்றுகிறார்! மற்றக்கடவுள்கள் ஏமாறுகின்றனர்! எத்தன்! ஏமாளி! கடவுளரின்இலட்சணம் இவ்விதம் — இப்படிப் புராணங்கள் —இவைகளை நம்புவதுதான் மதம்!!

ராட்சசனோ, மளமளவென்று கட்டிவிட்டான் மதிற்சுவரை – ஓரே நாள் வேலைதான் பாக்கி கடவுளர் உலகு கலங்கிற்று—லாக்மீது பாய்ந்தனர், உன்னால்தானே இந்தஆபத்து என்று. தன்உயிருக்கு உலை வைத்துவிடுவார்கள் என்று கண்டுகொண்ட லாக், மாயக்குள்ளனின் மந்திரசக்தி வாய்ந்த குதிரையினாலேயே அந்த மகத்தான மதிற்சுவர் கட்டப்படுகிறது என்பதை அறிந்து, அந்தக் குதிரையை மயக்க, ஒரு பெண் குதிரையை ஏவினான்! இருகுதிரைகளும் கானகம் சென்றன காதல்விளையாட்டில் ஈடுபட; வேலை தடைப்பட்டது, குறிப்பிட்ட காலத்திலே சுவர் கட்டி முடிக்காததற்காக, ராட்சசன் கொல்லப்பட்டான். பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டிவிடும் போக்கு இந்த லாக்குக்கு.

இவ்விதமாகவே இடர்கள்பலஉண்டாக்கிக்கொண்டே இருப்பது இந்தக்கடவுளின் வேலை.

ஒருமுறை சிப் என்ற சிங்காரத் தேவதையின், அலங்காரக் கூந்தல் தனக்கு வேண்டுமென்று கேட்டாளாம், லாக்கின் காதலி! சிப், தூங்கும்போது, கூந்தலைக் கத்தரித்து எடுத்துவிட்டான் லாக், கோ... கொதித்தது கடவுளருக்கு —... துத்தாக்கலாயினர் கூந்த... திருப்பித் தந்துவிட்டது... அருமையான ஆயுதங்க... மந்திர சக்திவாய்ந்த கொல்லர்க... கொண்டு செய்வித்து, கடவுள... குப் பரிசாகத் தந்து, கோபத்... தணியச்செய்தானாம், இந்தக்கோ... புத்திபடைத்த கடவுள்.

பரிசாகக் கிடைத்த ஆயுதங்க... பெற்று, அவைகளைச் செய்த கொ... லர்களைக், கடவுளர்கள் பாராட்டி... ராம்—அதை வேறு, கொல்லர்க... டம் சென்று கூறி, போட்டி பொ... மையை மூட்டிவிட்டானும் லா... அந்தக் கொல்லர்கள், அவற்றை... அருமையான ஆயுதங்களைச் செய்... தந்தனராம். அப்படிச் செய்ய... பட்ட ஆயுதங்களிலே ஒன்று தா... தார் தேவனின் சம்மட்டி!

அதை ப்ரோக் எனும் தே... கொல்லன் செய்து கொண்டிருக்கு... போது, லாக், வண்டுவடிவம்கொண்... கொட்டினான்; அதைச் சகித்து... கொண்டு சம்மட்டி செய்து, தா... தேவனுக்குத் தந்துவிட்டு, லா... தேவனின் தலை தனக்குவேண்டு... என்று நிபந்தனை விதித்தா... ப்ரோக். லாக், தந்திரமாக, "ச... தலையை எடுத்துக்கொள் — ஆனா... ஜாக்ரதை — கழுத்தை ஒன்று... செய்யக் கூடாது" என்று கூறிவி... கடவுளரும் அதை ஆமோதித்த... ஏமாற்றமடைந்த ப்ரோக், த... கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை... இந்த லாக்கின் கலகப் பேச்... வெளியே கிளம்பாதிருந்தா... அதுவே போதும் என்று கூறி, லா... கின் வாயைத் தைத்து வி... டானும்! இப்படிப் புராணம்!!

இவ்வளவு கெட்ட குணம் இரு... பினும், தார்தேவன் தன் 'திருவி... யாடல்'களின் போது, இந்த லா... தேவனைத் துணைக்கு அழைத்து... செல்வாராம்!

அப்படிச் சென்றபோது, ஒ... முறை, ஒரு மாயா லோகம் தெ... பட்டது; பனிக்கட்டிகளால் கட்... பட்ட கோட்டை கொத்தளங்கள்... அரண்மனைகள்! அவைகளிலே பிர... மாண்டமான ராட்சதர்கள்.

தார்தேவனும் லாக்கும் ஜோடு... கள் மீது போரிடச் செல்லும் வ... யிலே இந்த மாயாபுரியைக் கண்...

மன்னன் முன் சென்று நின்ற
அவன் இவர்களை மதிக்கவே
!
டவுள்களா!" என்று கேவல
கேட்டுவிட்டு, "எங்கே வந்தீர்
என்ன செய்யவல்லீர்கள்?"
சேலி செய்தானும், அந்த
புரி மன்னன். லாக், துள்ளிக்
து, "நான் இறைச்சியை எவ்
வேண்டுமானாலும் தின்பேன்—
டுமானால் போட்டியிடச்
ல்" என்றனும். லாக்குக்கும்
புரி ராட்சசன் ஒருவனுக்கும்
டி' நடந்தது, லாக் தோல்வி
ன். "இது போகட்டும் — ஓட்
ந்தயத்திலே எனக்கு நிகர்
ம் இல்லை" என்று வீரம் பேசி
லாக். தேவருலகில், லாக்குக்கு
யவர்கள் கிடையாது ஓட்டத்
எனினும், மாயாபுரிக்குள்ளன்
ன் தோற்கடித்துவிட்டான்,
தேவனை. தார் தேவன், சூரத்
ாகக் கிளம்பினான்—"நான் எவ்
வு வேண்டுமானாலும் குடிப்
' என்றான்—தோற்றான் ஒரு
சனிடம். ஒரு பூனையைக்
, "பாலகனே! இதைத் தரை
ந்து தூக்கு பார்க்கலாம்"
ன் மாயாபுரி மன்னன் —
முடியவில்லை தார்தேவனால்.
ழுவி வீழ்த்திவிட்டாள் தார்
ன, குஸ்திப் போட்டியில். இப்
ாக்கும் தாரும், தோல்விமேல்
வி அடைந்து துயருற்றனர்.
ள்கள் தோற்கின்றனர்!
த்தமாக இல்லையே, என்றுகூறி
ான்றும்; அறிவுஏற்றுக்கொள்
ன் மறுக்கும்—எனினும் ஆத்
இவைகளை நம்பித்தான் தீர
டும் என்று ஆர்ப்பரித்தது
டகளில் -- நம்பினர் ட்யூடன்

புரி திடீரென்று மறைந்த
— ராட்சசன் சிரித்துக்
டே, நீங்கள் கண்டது கண்
த்தை; கவலைப்படாதீர்கள் —
சி தின்னும் போட்டியிலே
தது, தீ! ஓட்டப் பந்த
ல் வெற்றி பெற்றது, சிந்தனை!
ம் போட்டியில் ஈடுபட்ட
' குடிக்கத் தரப்பட்டது,
பூனை, பூனையல்ல, அண்ட
த்தையும் அஞ்சிடச்செய்யும்
டு எனும் அரவம்! குஸ்தி
வற்றி பெற்றது, வயோதி
ன்று தத்துவார்த்த விளக்கம்
கூறிவிட்டு மறைந்தான்.

நம் நாட்டுப் புராணங்களுக்குத் தத்துவார்த்தம் கூறிப் பூரிப்பவர் சிலர் உண்டு — ட்யூடானியரிடமும் இருந்தது இந்தத் தந்திர முறை! எனினும் அறிவுத்தெளிவு ஏற்பட்டதும், இவைகளைக் கடவுட்கொள்கைக்கே இழுக்கு உண்டாக்குபவை என்று ஒதுக்கிவிட்டனர்—உண்மை அறிவை நாடினர், அந்நாட்டு மக்கள்.

மாயாபுரியில் இந்த அனுபவம் பெற்று, ஜோடுன் சென்று போரிலே வெற்றி பெற்றுத் திரும்பினர், தாரும் லாக்கும்—வழியிலே, தார் திகைத்தான், பதைத்தான், ஏனெனில் அவனுடைய அதிஅற்புதமான ஆயுதமாகிய சம்மட்டி காணப்படவில்லை. தார் திகிலடைந்தான் — அந்தச்சம்மட்டி இல்லாமல் கடவுளர் உலகு பிழைத்திருக்க முடியாது. உடனே, லாக் ஒருபறவை வடிவெடுத்து ஜோடுன் சென்று சம்மட்டியை, திரிம் என்ற மன்னன் களவாடி வைத்திருக்கும் செய்தியைக் கண்டறிந்தான். அந்த மன்னனோ, கட்டழகி பிரிஜியாவைக் கடிமணம் செய்து தந்தால சம்மட்டியைத் திருப்பித்தருவதாகக்கூறினன். பூமிக்கடியில் ஒன்பதுமைல் ஆழத்தில் சம்மட்டியைப் புதைத்து வைத்திருப்பதாகக் கூறினன்.

லாக்கூறிய சேதிகேட்டு தார் திடுக்கிட்டான் — பிறகு, லாக்கின் யோசனைப்படி, தார், பிரிஜியர்போல மாறு வேஷம் போட்டுக்கொண்டார், லாக், தோழியாக நடித்தான். இருவரும், ஜோடுன் சென்றனர் — திருமண விருந்து நடைபெற்றது—திருமணப் பரிசாகச் சம்மட்டி தரப்பட்டதும், பெண் வேஷத்தைக் கலைத்துவிட்டு, தார்தேவன், ராட்சசனைத் தவிடுபொடியாக்கினன். நம் நாட்டுப் புராணிகர்கள் மகாவிஷ்ணுவுக்கு, 'மோகினி அவதாரக்கதை' கட்டினர்களே, அதுபோல, ட்யூடன் புராணிகன், கட்டிவிட்டான், இப்படி ஒரு சரடு சரடு என்று இன்று சர்வசாதாரணமாகக் கூறுகிறோம்—ஆனல் அன்று, இதுபோலக் கூறினல் தலைபோகும்! அவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கையும், தணியாத வெறியும் இருந்தது பக்தர்களுக்கு.

லாக்தேவன், கொலையும் செய்திருக்கிறன்—அதுவும் ஒருகடவுளை!!

ஓடினுக்கு, தார் தவிர வேறு குமாரர்களும் உண்டு, சிவனுக்கு விநாயகர் தவிர முருகனும் உண்டல்லவா, அதுபோல! முருகன் என்றால் அழகு என்றல்லவா பொருள் —மதவாதிகள், இலக்கிய கர்த்தாக்கள் ஆகியோரின் கற்பனைப்படி! அதுபோலவே, ஒரு 'முருகன்' ஓடினுக்கு. இந்த ட்யூடன் முருகன் பெயர், பால்டர். இவனைத்தான், சதி செய்து கொன்று விட்டான், லாக்; கடவுளைக் கடவுள் கொல்கிறார்! பக்தர்கள், பதறாமல் படிக்கவேண்டும், பூஜையும் செய்யவேண்டும், என்று மதம் கட்டளை பிறப்பித்தது — கட்டுப்பட்டனர் மக்கள்! அக்ரமமே உருவான லாக்தேவன், தன் சொந்த அண்ணன் மகனும் பால்டரைக் கொல்லத்துணிந்ததற்குக் காரணம் வேறொன்றுமில்லை, மற்றக் கடவுள்களெல்லாம், பால்டரிடம் பிரியமாக இருக்கிறார்கள் என்பதுதான்! எப்படி இருக்கிறது இந்தக் கடவுளின் குணதிசயம்.

பால்டர் தேவனுக்கு ஒரு நாள் 'மரணபயம்' ஏற்பட்டு விட்டது — கலங்கினன் கதறினன். அருமை மகனின் அச்சத்தைப் போக்க ஓடின் ஏதேதோ செய்தும் முடியவில்லை. தாயோ தவித்து, கடவுளர் உலகு முதற்கொண்டு சகல உலகங்களிலும் உள்ள சகல பொருள்கள், ஜீவராசிகளிடமும் முறையிட்டு, பால்டருக்கு ஒரு தீங்கும் செய்யக்கூடாதென்று, சகலத்திடமும் சத்தியம் பெற்றாள்—ஆனல், இதனல் என்ன ஆபத்து வந்துவிடமுடியும் என்று அலட்சியமாகக் கருதி, புல்லுருவியிடம் மட்டும் சத்தியம் வாங்கிக் கொள்ளவில்லை.

தன்மகனுக்கு இனி மரணபயம் இல்லை, என்று மகிழ்ந்தாள்—அழகனுக்கு ஆபத்து இல்லை என்பதறிந்து எல்லாக் கடவுளரும் களித்தனர். மலைமலர், இரும்புபஞ்சு, நீர்நெருப்பு ஆகிய எதை எடுத்து பால்டர் மீது வீசினலும் அழகுத் தெய்வம் புன்னகைசெய்யும்—எதுவும்தன் புறத்தாததால். இதைக் கண்ட லாக், பொறமை கொண்டு, அங்கிருந்த ஒரு குருட்டுக் கடவுளைத் தூண்டிவிட்டு, அனைவரும்பால்டர்மீதெதை யாவது வீசி விளையாடுகிறார்களே, நீ மட்டும் ஏன் சும்மா இருக்கிறாய் இந்தா வீசு என்று கூறி ஒரு புல்லுருவியைக் கொடுத்தான். சூது வாதறியாக் குருட்டுத் தெய்வம், புல்லுரு

(12-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 2—10—49 [காஞ்சி

'பெர்லின்' பாதை!

●

அதிகாரிகள் தாக்கப்படுகின்றனர்!

போலீஸ் ஸ்டேஷன்கள் தாக்கப்படுகின்றன!

தபாலாபீசுகள் கொளுத்தப்படுகின்றன!

தந்திக் கம்பிகள் அறுக்கப்படுகின்றன!

ரயில்கள் கவிழ்க்கப்படுகின்றன!

பாலங்கள் இடிக்கப்படுகின்றன!

பலாத்காரம் தலைவிரித்தாடுகிறது!

பொதுமக்கள் வாழ்வு குலைக்கப்படுகிறது!

உடைமைக்கும் உயிருக்கும் ஆபத்து வருகிறது!

சட்டம் மதிப்பிழக்கிறது!

அமைதி குலைகிறது!

அராஜகம் தலைதூக்குகிறது!

நாடு நாசமாகிறது!

வாழ்வு, பயங்கரமானதாகிறது!

* * *

1942-ம் ஆண்டு, அப்போது ஆட்சி செலுத்திவந்த ஆங்கிலர் இப்படி ஒரு 'பட்டியலை'க் காட்டினர், சிலரைச் சுட்டுத்தள்ளினர், பலரைச் சிறைக் கொட்டடியில் தள்ளினர், காங்கிரஸ் கட்சியை ஒழிப்பது என்று துணிந்து, அவசரச் சட்டம் கொண்டு தாக்கினர். நாட்டிலே எவ்வளவு நாசவேலை நடைபெறுகிறது பாரீர், இந்தப் பயங்கரத்தை உண்டாக்குபவர்களை அடக்காவிட்டால், ஆட்சி என்ன ஆகும், அதை நம்பி வாழும் மக்கள் என்ன கதி ஆவர்—எந்த நாகரீக சர்க்கார்தான் இந்தநாசவேலையை, பலாத்காரத்தை ஒடுக்காமல் இருக்கமுடியும்—என்று அன்றைய சர்க்கார், வாதாடினர்—அறிக்கைகள், விளக்கங்கள் விடுத்தனர்—சர்க்கார் மேற்கொள்ளும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொது மக்களின் ஆதரவு திரட்டினர்.

கண் சிமிட்டினர்! கைகொட்டிச் சிரித்தனர்! கேலி பேசினர்! அடக்கிவிடப் போகிறார்களாமா இந்த அசகாயச் சூரர்கள்? அவசரச் சட்டம், ஆள்தூக்கிச் சட்டம், தடைபோடும் சட்டம், ராணுவ தர்பார் எனும் முறைகளைக் கொண்டு ஆட்சியை நடத்துவதுதான்,வீரமோ,அறமோ, ஜனநாயகமோ!—என்று கேட்டனர்—சிறையும் சென்றனர்.

* * *

7 ஆண்டுகளாகி விட்டன! சிறையில் அன்று தள்ளப்பட்டவர்கள் இன்று 'கனம்'களாகி விட்டனர்—இப்போது, மீண்டும் நாட்டினருக்கு ஒரு பட்டியல் தரப்படுகிறது, நாசவேலை செய்கிறார்கள், பலாத்காரம் தலைவிரித்தாடுகிறது, கொலை, கொள்ளை, தீ மூட்டுதல் ஆகிய கொடுமைகளைச் செய்கின்றனர், என்று, ஆதாரங்கள் காட்டப்படுகின்றன—அடக்குமுறையை அவிழ்த்து விட்டாலன்றி இந்தபலாத்காரத்தை அடக்கமுடியாது என்று வாதிடப்படுகிறது, தடை உத்தரவுச் சட்டம் தாராளமாக வீசப்படுகிறது, 'மக்களாட்சி நடத்தும்' மந்திரிகளால்! 1942-ல், ஆகஸ்ட்டு அமளி! 1949-ல் கம்யூனிஸ்டுகள் கலகம்! நாடு, மீண்டும் நாசவேலையையும் தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது, அந்த நாசவேலையை ஒடுக்குவதற்காக என்று கூறிக்கொண்டு ஆளவந்தார்கள் வீசும் பாசிச முறைகளையும் சகித்துக்கொள்ள வேண்டி இருக்கிறது. அன்றும் இன்றும் அவதிக்கு ஆளாவோர், பொதுமக்கள் தாம்! அவதியும் ஒரு உருவில் அல்ல! இருபுறம் கூருள்ள ஈட்டி கொண்டு தாக்கப்படுகின்றனர், பொதுமக்கள். "இலட்சிய வெற்றிக்காக' என்று கூறிக்கொண்டு, சிலர் செய்யும் நாசவேலை எனும் ஈட்டி முனையும் தாக்குகிறது—பலாத்காரத்தை ஒழிப்பது என்று கூறிக் கொண்டு ஆட்சியாளர்கள் வீசும் பாசிசப் போக்கு எனும் ஈட்டி முனையும் தாக்குகிறது. இரண்டும் சேர்ந்து தாக்க, இடர்ப்படுகின்றனர், பொதுமக்கள்.

இலட்சியங்கள் தேவை—அவை பற்றிய விளக்கப் பிரசாரம் நிச்சய தேவை—இலட்சிய வெற்றிக்கா நடவடிக்கைகள் கட்டாயம் தேவை—ஆனால் இதற்குப் பலாத்கார தான் வழி என்றால், நல்லாட்சியு நல்வாழ்வும் விரும்பும் எவரு உலகின் இன்றைய நிலையை உ ரும் எவரும், பலாத்காரம் எ னென்ன விதமான தீமையா விளைவுகளைத் தரும் என்பவ யூகித்தறியக்கூடிய எவரும், அ பலாத்கார வழியை ஆதரிக் முடியாது.

சுயராஜ்யம் எனும் சுவையுள் இலட்சிய வெற்றிக்காக, 1942 காங்கிரசார் நடத்திய ஆகஸ் அமளியும் சரி, பொதுஉடை எனும் பயனுள்ள இலட்சிய வெற் காக 1949-ல் கம்யூனிஸ்டுகள் நட துவதாகக் கூறப்படும் பலாத்கா மும் சரி, அமைதியையும் பொ முன்னேற்றத்தையும் விரும் எவராலும் ஆதரிக்கப்பட முடி தனவேயாகும். நாம், அந்த ஆக டையும் சரி, இந்த செப்டம்பரை சரி, ஆதரிக்கும் மனப்போக்கு யவரல்ல! ஆகஸ்ட்டார், நம்மை 'தேசத் துரோகி' என்றார், செப் பர்காரர்கள் நம்மை, சிவப்பு விரோதி என்பர், நாமோ, பல காரத்துக்கு, நாசவேலைக்கு, மளிப்பது, இலட்சிய வெற்றிய நாட்டைக் காடாக்கும் மு என்று, உள்ள உறுதியுட கண்டனங்களைப் பற்றிக் கவ படாமலும் கூறிடக் கடமைப் டிருக்கிறோம். எனவேதான் 19 ஆண்டும் நாம் 'சில இலட்சியவ கள்' மேற்கொண்ட பலாத்கா ரத்தைக் கண்டித்தோம், 194 கம்யூனிஸ்டுகள் செய்வதாகக் க படும் பலாத்காரத்தையும் கண் கிறோம்—பொதுமக்களின் வாழ் ஆபத்தும் குழப்பமும், அவ அல்லலும் சூழக்கூடாது எ புனிதக் கோட்பாட்டுக்காக.

இந்தப் பலாத்கார உண தழைப்பதும், அதிலே ஒரு யான 'மோகம்' பிறப்பதும் நாட்டைப் பொறுத்தமட்டிலே படி ஏற்பட்டது என்று பா தால், 1942 ஆகஸ்ட்டில் தூவப் விதையின் விளைவுதான் எ விளங்கும். அந்த ஆகஸ்ட்டு றிப் புகழப்பட்டு, அதன்

பற்றிச் சிந்துகள் பாடப்பட்டு, அதிலே கலந்து கொண்டவர்களின் சித்திரங்கள் தீட்டப்பட்டு, அந்தத் தியாகத்துக்குப் பரிசுகள் வழங்கப்பட்டு, வந்ததைக்கண்டதால், பொது உடமை எனும் இலட்சியத்தில் பற்றுக் கொண்டவர்கள், தாமும் தமது இலட்சிய வெற்றிக்காக, அதுபோன்ற பலாத்கார முறைகளையே கையாள்வது தவறல்ல, பாராட்டுதலுக்குரியதேயாகும் என்ற எண்ணம் பெற முடிந்தது; முன் ஏர் சென்ற வழி பின் ஏர் செல்லும் என்ற முதுமொழிப்படி!

எனவே, நாட்டிலே நாசவேலைக்கும் பலாத்காரத்துக்கும் இடம் கிடைத்ததற்கே காரணம், இன்று அதனை அடக்கக் கடுமையான சட்டம் வீசும் மந்திரிமார்களை அளித்துள்ள, காங்கிரஸ் கட்சியின் முன்னாள் போக்குதான்.

அதுமட்டுமல்ல. இந்நாள் அவர்கள் நடாத்தும் ஆட்சி, மக்களின் மனதிலே தணியாத கோபத்தையும், வாழ்விலே குறையாத வாட்டத்தையும் தருகிறது. போக்கிலே ஒரு முடுக்கு—பேச்சிலே ஒரு வகைச் சர்வாதிகாரம்— நடவடிக்கைகளிலே, நம்மை மிஞ்சுபவர் யார் என்ற ஆணவம், இவை காணப்படுகின்றன. அகவிலை ஒரு புறம் தாக்குகிறது, அரசாள்வோரின் ஆணவப்போக்கு மற்றோர் புறம் தாக்குகிறது. பஞ்சம், போதாமை, இல்லாமை, ஒருபுறம் கொட்டுகின்றன, 144, பறிமுதல், ஆள்தூக்குதல், எனும் அடக்கு முறைகள் மறுபுறம் கொட்டுகின்றன. வயல்களிலே புயல்! ஆலைகளிலே அமளி! நகரங்களிலே, கொள்ளை இலாபம் தேடும் கள்ள மார்க்கட்காரர்கள்! சட்டசபைகளிலே, குறட்டை விடாமல் தூங்கும் உறுப்பினர்கள்! இப்படிப்பட்ட சூழ்நிலை!! ஏன், பரவாது கம்யூனிசம்? எப்படித் தடுக்க முடியும்! செவிபுகுமா, சட்டம் சமாதானம், சாந்தம் சத்தியம் எனும் உபதேசங்கள்! பசி, கோபமூட்டுகிறது! பஞ்சம், மனிதனை மிருகநிலைக்குத் துரத்துகிறது; திட்டங்கள் கட்டுகட்டாகக் காட்டப்படுகின்றன, பலன் பூஜ்யமாக இருக்கிறது! இந்நிலையில் நாட்டை வைத்துக்கொண்டு, எப்படி கம்யூனிசக் கொள்கை மக்களிடம் பரவாதிருக்கச் செய்யமுடியும்! பரவிவிட்டது! இனிமை தரும் இலட்சியம்.

இந்த அடிப்படை உண்மையை உணராமல், பலாத்காரத்தில் இக்கட்சி ஈடுபட்டிருக்கிறது, ஆதாரம் ஏராளமாகச் சர்க்காரிடம் உள்ளன, எனவே, கம்யூனிஸ்டு கட்சியைச் சட்டவிரோதமாக்கிவிட்டோம் என்று கூறிவிடுவதில் பலன் இல்லை.

அன்று ஆங்கிலர் வெளியிட்டது போலவே இன்றுகாங்கிரஸ் அறிக்கை வெளியிடுகிறது, அடக்குமுறைக்கு அவசியம் ஏற்பட்டிருப்பதை வலியுறுத்த என்றுதான் கருதப்படும்.

நம்முன் ஓர் அறிக்கை இருக்கிறது, இந்திய் சர்க்காரின் போலீஸ் இலாக்காவின் அறிக்கை—71 பக்கங்கள் கொண்ட விலையுயர்ந்த வெளியீடு—எல்லாம் 'ஆர்ட்' காகிதம், அழகான அச்சு, படங்களும் உண்டு. கம்யூனிஸ்டுகளின் பலாத்காரச் செயல்களைத் தொகுத்தும் விளக்கியும் காட்டி, இதனாலேயே கம்யூனிஸ்டு கட்சியைச் சட்டவிரோதமாக்கப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது, இந்த அறிக்கையில்.

1942ல் இதே முறையிலேதான் பிரிட்டிஷார், வெளியீடுகளை அனுப்பினர்.

வேறுவழி தேடுங்கள் என்று கூறுகிறோம் நாடாள்வோருக்கு.

கம்யூனிஸ்டு கட்சியினர் பலாத்காரச் செயலில் ஈடுபட்டால், ஆதாரம் கிடைத்ததும், வழக்குத் தொடுத்து, சட்டத்தை வேலை செய்யவிடுங்கள் – இப்படியெல்லாம் நடந்தது, ஏனவே அந்தக் கட்சியையே கலைத்துவிட நினைக்கிறோம், என்று கூறுவது சரியா, என்று கேட்கிறோம்— கோரிய பலன்தான் தருமா? வங்க சர்க்கார், கம்யூனிஸ்டு கட்சியைச் சட்டவிரோதமாக்கினர்—அதன்பலனாக, சாந்தியா வீசுகிறது!

பலாத்காரமே, மறைமுக வேலைதானே! சர்க்கார் அறிக்கையே காட்டுகிறபடி, 'பத்துபேர் கூடி இரகசியமாகத் திட்டமிட்டுநடத்தும் செயல்' தானே இந்த பலாத்காரம்? இது ஒரு கட்சி வைத்துக்கொண்டால் மட்டுந்தானா, நடைபெறக்கூடியது.

கலைத்துவிடுவது, சரியான பரிகாரம் என்று நாம் கருதவில்லை. எந்தக் கொடுமைகள், வறுமையின் விளைவுகள், மக்களைப் பாழ்படுத்துகிறதோ, எந்தச் சூழ்நிலை, கம்யூனிசத்துக்குக் கதவைத் திறந்து விடுகிறதோ, அதனை மாற்ற முனையவேண்டும்—இந்திய சர்க்காரின் போலீஸ் இலாக்கா அல்ல, பரிகாரம்—மக்களின் வாழ்விலே வளம் உண்டாக்கும் பணிபுரியும் இலாக்காவின் வேலையே தக்க பரிகாரமாகும். மாஸ்கோவின் அறைகூவலுக்குப் பதில் கூற பேர்லினைப் பூஜித்துப் பலன் காணமுடியாது—மக்களை வாழ்விக்கும் திட்டத்தை மேற்கொள்வதே முறை. அதை விட்டுவிட்டு, ஒரு கட்சியைச்சட்டவிரோதமாக்குவது, பாசிசப் போக்காகும்; ஜனநாயகக் கோட்பாட்டை மதிக்கும் எவரும் இப்போக்கைக் கண்டித்தே தீருவர்.

*

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

வர், இப்போது நாடகம் நடத்தியதையே நையாண்டி செய்தும், கண்டித்தும், பேசுகிறார் எழுதுகிறார் என்பதைக் காணும்போது, அவரைப்பற்றியும் அவருடைய போக்கைப்பற்றியும் என்ன எண்ணுவது! ஏன், அன்று புகழவேண்டும், உற்சாகமூட்டவேண்டும் — இன்று நையாண்டி செய்வது, எவ்வகையான நியாயம்! சில திங்களுக்கு முன்பு சென்னையில் நடைபெற்ற 'குறள் மாநாட்டு'க்குக் கூட, எங்கள், 'சந்திரமோகன்' தேவைப்பட்டது—பெரியாரின் அகமும் முகமும் மலர்ந்தது நாடகம கண்டு — இப்போது, 'நாடகம் நடத்துவது' நையாண்டிக்குரியதாகிவிட்டதா! என்ன நியாயம் இது!

நாங்கள் பெரியாரிடமிருந்து இப்படிப்பட்ட முறண்பாடுகளை எதிர்பார்க்கவில்லை.

தூக்கிவைத்துப் புகழ்வதும், கீழேதள்ளி மிதிப்பதும், ஒருவேளை சாமான்யர்களின், குணமாக, போர்முறையாக இருக்கலாம், திராவிடச் சமுதாயத்தின் தலைமையைப் பெற்றுத் திகழ்பவருக்கு இந்தப்போக்கு இருத்தலாகாது. அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பதுபோல, இப்போது, திருமண ஏற்பாட்டினால் விளைந்த மாறுதல்களை எண்ணிக்கொண்டு, மனக்கொதிப்பு அடைந்து, அதை மாற்றிக்கொள்ள, முன்பு, எதைஎதைப் புகழ்ந்தாரோ, பாராட்டினாரோ, பெருமைப்படத்தக்கதென்றாரோ, அந்த முயற்சிகளையே, இழித்தும் பழித்தும் பேசுவது, அழகல்ல, அறமுமாகாது.

(11-ம் பக்கம் பார்க்க)

"சந்திரோதயம்"

அன்றும்—இன்றும்

"சமயசஞ்சீவிகளுடன் அரசியல் சேற்றில் புரண்டு அல்லல் படாமல் இம்மாதிரி தொண்டு உண்மையும் பயனளிக்கக் கூடியதுமாகும் என்று தெரிவித்துக் கொண்டு அண்ணாதுரையையும் காஞ்சி திராவிட நடிகர் கழகத்தாரையும் மனமார வாயாரப் பாராட்டி ஆசி கூறுகிறோம்."

இந்த 'ஆசி' கிடைத்தது, பாராட்டுதல், வாயாரமட்டுமல்ல, மனமாரக் கிடைத்தது, அண்ணாத்துரைக்கும்; அவருடன் சேர்ந்து நாடகத்தில் நடித்த நண்பர்களுக்கும்.

புராணப் பிரசார நாடகங்களே நாட்டிலே பரவி, மக்களின் மனதைப் பாழ்படுத்திக்கொண்டு வந்த நேரம்—புராண நாடகமாடினால்தான் வருவாய் கிடைக்கும், கம்பெனி நடத்த முடியும் என்று பேசப்பட்டு, நம்பப்பட்டு வந்த காலம், ஒரு இலட்சம், ஐம்பதாயிரம் என்று பணம் செலவு செய்து "கிருஷ்ணலீலா" "ராமபக்தி" போன்ற நாடகங்கள் தயாரிக்கப்பட்டு வந்த நாட்கள், நடிகவேள் ராதாவின் "இரத்தக் கண்ணீரும், தூக்குமேடையும், போர்வாளும்' பிறவும் நாட்டில் அருமபாத சமயம் —அப்படிப்பட்ட சமயத்திலே, துணிந்து, நாடகமாட முன்வந்தனர், அறிவுப் பிரசாரத்துக்காக, அண்ணாத்துரையும் நண்பர்களும்.

"சந்திரோதயம்" எனும் நாடகம் வைதீகத்தின் பிடியில் சிக்கிய ஒரு செல்வவானின் சீரழிவைச் சித்தரித்துக் காட்டிற்று.

தமிழகத்தில் பல நகரங்களில் நடைபெற்றது.

"ஆசி கூறுகிறோம்—மனமார வாயாரப் பாராட்டுகிறோம்' என்று கூறினர்—பொறுப்பு மிகுந்தவர்.

ஒரு கட்சியின் தலைவரே, இது போல், ஆசி கூறி, பாராட்டினால், எங்களுக்கு மேலும் உற்சாகமும், அந்தக் காரியத்தைத் தொடர்ந்து செய்யவேண்டுமென்ற ஆர்வமும் ஏற்படத்தானே செய்யும்.

'இம்மாதிரித் தொண்டு உண்மையும் பயனளிக்கக் கூடியதுமாகும்' என்றுகூறிவிட்டார்,—யார்? தலைவர் பெரியார்! சமயசஞ்சீவிகளுடன் அரசியல் சேற்றிலே புரளாமல், இம்மாதிரித் தொண்டு செய்வது, உண்மையான பயன் தரும் என்று, அவரே கூறிப் பாராட்டின பிறகு, அந்த நாடகத் துறையிலே பற்றும் ஆர்வமும் எங்களுக்கு ஏற்படத்தானே செய்யும்.

இப்படிப்பட்ட பிரசார நாடக மூலம் நாட்டைத் திருத்தவேண்டும் என்று, தாம், 10, 15, வருஷகாலமாகவே சிந்தித்துப் பார்த்ததாகவும் சரியான வெற்றி கிடைக்கவில்லை என்றும் கூறினர்.

"இதை நாம் சுமார் 10, 15 வருஷ காலமாகவே சிந்தித்துச் சிந்தித்து ஒன்றும் கைகூடாமல் இப்போது தோழர் அண்ணாதுரை அவர்கள் துணிவோடு கிளம்பி முகத்திற்குச் சாயம் பூசிக்கொண்டு மேடையேறிப் பாவலாப் போடவும் அதை ஒரு சமயத்தில் 5000 மக்கள் பார்த்துக் களிக்கும்படியான நிலை ஏற்பட்டிருக்கிறதையும் பார்த்து நாம் பெருமை அடையாமல் இருக்க முடியவில்லை."

நாடகம் ஒரு நல்ல பிரச்சாரக் கருவி நாட்டைத் திருத்த அது பயன்படும், எப்படி அதைத் தக்க விதத்தில் பயன்படுத்துவது என்றெல்லாம் தலைவர் சிந்தித்து வந்திருக்கிறார் 10, 15 ஆண்டுகளாக. அவருடைய எண்ணத்தை, "பெருமை அடையாமல் இருக்க முடியவில்லை" என்று அவரே கூறும் அளவுக்கு வெற்றிகரமாக்கினோம், 'சந்திரோதயம்' நடத்தி. ஆசியும் பாராட்டுதலும் பெற்றோம்.

இந்த, எமது முயற்சி எவ்வளவு சிலாக்கியமானது என்பதை விளக்க, "இன்று ரஷ்ய நாடானது ஸ்டாலினது உருக்கு ஆட்சியின் கீழ், நிலை குலையாமல் இருந்து உலகத்தைக் காப்பாற்றி வருகிறது என்றால் அது பெரிதும், ஸ்டாலினது வீரமல்ல, வெற்றியல்ல, அறிவல்ல, ஆற்றலல்ல என்று மும்முறை முரசறைகுவோம். மற்றென்னையெனில் அங்கு அம்மக்களுக்குத் தலைவர்களும், உண்மை உணர்ச்சி உள்ளவர்களும் செய்து வரும் இடையறாப் பிரசாரமேயாகும்.

அப்படிப்பட்ட பிரசாரங்கள் நடத்துவதில் இந்த மாதிரி நாடகமும் முதன்மையானதாகும்" என்றும் தீட்டினர்.

"நாடகம்பார்த்த மக்களுக்கு வேது உணர்ச்சியாகவும் அறிவுக்கு நல் விருந்தாகவும் மானத்திற்கு உயர்தர வழிகாட்டியாகவும் தொடக்கம் முதல் முடிவு வரை விளங்கியது என்பது சிறிதும் மிகைப்படக் கூறியதாக ஆகாது"

என்றும் தீட்டப்பட்டிருந்தது.

19—11—43-ல், ஈரோடில் நடைபெற்ற 'சந்திரோதயம்' நாடகத்திற்குத் தலைமைவகித்தார் பெரியார்—பாராட்டினர் — களித்தார் — என் இன்பக்கனவு நனவாகிறது என்று பூரித்தார் — இதைச் சாதித்த 'அருமை அண்ணாவைப்' பாராட்டுகிறேன் என்றார்.—இத்துடன் நில்லாமல்: 27—11—43-ல் குடிஅரசில் மேலே, குறிப்பெழுத்துக்களில் காணப்படும் கருத்துக்களைத் தீட்டினர் தலையங்கமாக.

இவ்வண்ணம், பயனும் சுவையுமுள்ள, தலைவரின் மனதிலே உருக்கொண்டிருந்த திட்டம் எனத்தக்க நாடகத்தை நடத்துவது, அவருக்குக்களிப்பும் பெருமையும் தருகிறது, நமக்கு அவருடைய ஆசியும் பாராட்டுதலும் கிடைக்கிறது, என்பது அறிந்து நாங்கள் மனமகிழ்ந்தோம். எமது முயற்சிக்குப் பிறகு, நாடக உலகிலேயே, குறிப்பிடத்தக்க மாறுதல்கள் காணப்படலாயின. கம்பெனிகள், முள்ளில் ரோஜா — உயிரோவியம் — அந்தமான் கைதி—பெண்—இமயத்தில் நாம்—மணமகள்—என்பன போன்ற நாடகங்களை நடத்தலாயின—மகிழ்ந்தோம். நடிகவேள் ராதா, அறிவுப் பிரசார நாடகக் கம்பெனியை நடத்தலானர்—பூரித்தோம். இந்த நிலைக்குத் துவக்க விழா நடத்துவது போல் அமைந்திருந்தது, சந்திரோதய நாடகம்.

அதை அன்று, மனமார வாயாரப் பாராட்டினவர், புகழ்ந்து தீட்டின

(9-ம் பக்கம் பார்க்க)

"புது வாழ்வு"

—*—

'புதுவாழ்வு' மலர்ந்திருக்கிறது; மகிழ்ச்சி நமக்கு! இளைஞர் உலகின் மலர்ச்சி எழுத்துக்கள் புதுவாழ்வைப் பொலியச் செய்துள்ளன!

தோழர்கள். பூ. கணேசன், பி. ஏ. ஆனர்ஸ்) க. அன்பழகன், பி. ஏ. ஆனர்ஸ்) இரா. செழியன், பி. ஏ., ஆனர்ஸ்) ஆகியவர்களின் கருத்தொளிகொண்டு புதுவாழ்வு மலர் பூக்கும் என்றும், தோழர்கள், கே. ஏ. மதியழகன் பி. ஏ., ப. வாணன். ஆகியோரின் எழுத்துக்கள் அதற்கு அழகூட்டும் என்றும், மலரை, மக்களுக்குப் படைக்கும் பொறுப்பு தோழர் ஈ. வி. கே. சம்பத்துடையது ,என்றும் அறிந்துமிக மிக, அகமகிழ்கிறோம்.

ஆசிரியக்குழுவிலிருக்கும் தோழர் பூ. கணேசன், பட்டம் பெற்ற நாள் முதல் பத்திரிகைத் துறையிலீடுபட்டு, திறமையும், செயல்வன்மையும் கொண்டவர். 'விடுதலை'யின் உதவி ஆசிரியராகவும், நிலவு" ஆசிரியராகவும் இருந்து தன் எழுத்தால் எண்ணத்தால் இளைஞருலகுக்கு மகிழ்வூட்டியவர். தோழர் க. அன்பழகன் "புதுவாழ்வு" மாதஇதழ் ஆசிரியராக இருந்து, தனது எழுத்தோவியங்களால் மக்களுக்குநல்விருந்தளித்தவர். தனது கருத்துக் குவியல்களால் எழுச்சியூட்டியவர் தோழர் செழியன், மன்றம்" மூலமாக! மறுமலர்ச்சிப் பாதையில் சிந்தனை பதித்து இலட்சியத் தோட்டம்காட்டுபவர் தோழர் ப. வாணன்! தோழர் மதியழகன் மாணவர்கழகத்தலைவர் — சிறந்த எண்ணங்களைத் தருபவர்!

இவர்கள் கூட்டுமுயற்சியில் மலரும் புதுவாழ்வின் நிர்வாக ஆசிரியர் தோழர் ஈ. வி. கே. சம்பத், மாணவருலகின் மணி, வாலிப உள்ளங்களின் ஒலி!

புதுஅமைப்புடன் பூத்துக்குலுங்கும் புதுவாழ்வை வரவேற்கிறோம்! கருத்துத் தோட்டங்களில் கிடைக்கும் மலர்களை மக்களுக்குத் தந்து புதுவாழ்வு, மக்களின் புதுவாழ்வுக்குப் பண்ணிபுரியட்டும் என்று வாழ்த்துகிறோம்! இளம் இதயங்களின் சேவையுணர்ச்சியைப்பாராட்டுகிறோம்!

வார இதழ்: விலை அணு 2

சென்னையில் குறள் மாநாடு

சில திங்களுக்கு முன்பு பேராசிரியர், நாவலர், சோமசுந்திர பாரதியார் தலைமையில், திரு. வி. க, திரு. சக்ரவர்த்தி நாயனர், பன்மொழிப் புலவர் மீனாட்சி சுந்தரனார் ஆகிய பேரறிஞர்கள் கலந்துகொள்ளும் நிலையில், பெரியாரால் குறள் மாநாடு நடத்தப் பட்டது.

அப்போது ஆர்வமோ பற்றோ காட்டாத யாரோ சிலருக்கு, இப்போது, ஏன் தோன்றிற்றோ ஒரு வகை ஆர்வம் குறள் மீது, நாமறியோம்!.

குறள் மாநாடு நடத்தப் போவதாகக் கூறினர்-என்னையும் அழைத்தனர்—நான் வருவதற்கு இயலாது என்று தெரிவித்து விட்டேன்.

என்னை அழைத்தபோது, குறள் மாநாட்டிலே, 'நட்சத்திரங்கள்' ஜொலிக்கும், என்று தெரிவிக்கப் படவில்லை — நல்லறிவு பரப்ப, தோழர்கள் சேதுப் பிள்ளை போன்றார் வருவர் என்று மட்டுமே கூறப் பட்டது.

நான், அந்தக் குறள் மாநாட்டிலே கலந்து கொள்வதற்கில்லை என்று தெரிவித்தான பிறகு, சுதேசமித்ரனில், என் பெயரையும் சேர்த்து, விளம்பரம் வெளிவந்தது — விளக்கம் கேட்டேன். வருத்தம் தெரிவித்துக் கடிதம் எழுதி அனுப்பினர், மாநாடு நடத்தியவர்கள். அதன் பிறகு, துண்டு நோட்டீசுகளிலோ, போஸ்டர்களிலோ என்பெயர் சேர்க்கப் படவில்லை என்றே நினைக்கிறேன்.

மாநாடு, மக்கள் மனதுக்குச் சங்கடம் ஏற்படக்கூடிய முறையில் இருந்ததாக அறிய நேரிட்டது.

முயற்சியே அனுவசியமானது, ஆகவேதான், முடிவு அவ்விதம் இருந்தது, என்று எண்ணுகிறேன்.

என்ன செய்தால் அதிக கூட்டம் கூடும் என்பதை நோக்கமாகக் கொள்ளாமல், எதை, யார், எப்போது, எம்முறையில் செய்யவேண்டும் என்பதை நோக்கமாகக்கொள்ள வேண்டுவதே முறை.

மாநாடு வெற்றிகரமாக நடைபெறுததால், அதை நடத்த எண்ணியவர்கள் ஏளனத்துக்கு ஆளானது அல்ல இதிலே உள்ள கஷ்ட நஷ்டம்—எப்படிப்பட்ட உன்னதமான குறள், எவ்வளவு ஏளனத்துக்குரிய நிலைக்குக் கொண்டுவரப்படுகிறது, என்பதை எண்ணிப்பார்த்தால் தான், இதிலுள்ள கஷ்ட நஷ்டம் விளங்கும். எனவே, இனியேனும் இவ்விதமான வீண் முயற்சிகளில் ஈடுபடாமலிருப்பதுடன், ஏதேனும் செய்யவேண்டும் என்று எண்ணினலும், 'குறள்' போன்ற, அருமையும் பெருமையும் வாய்ந்த கருவூலத்தின் மதிப்பைப் பாதிக்கக்கூடிய வகையிலே நடந்து கொள்ளாமலும் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

—சி. என். அண்ணாத்துரை

"திராவிடன்"

ஓய்வின்மை காரணமாக, இடையே நின்றிருந்த 'திராவிடன்' புதுமுறுக்குடன் மீண்டும் பணியாற்றக் கிளம்பி நான்கு வாரங்களாக வெளி வருகிறது.

ஆசிரியர் தோழர் என். வி. நடராசன் திராவிடத்துக்கு அறிமுகப் படுத்தப் படவேண்டியவரல்ல, கட்சித் தொண்டே கடமையெனக் கொண்டவர். அவரது எழுத்துக்கள், எழுச்சியூட்டக் கூடியன, தொழிலாளர் பிரச்னைகள் பற்றிய கட்டுரைகளும், 'திறந்த மடலும்' ஒரு சிறந்த அம்சம்.

புதுப்பாதை புகுந்து, முரசு கொட்டும் 'திராவிடனை' வரவேற்கிறோம் பெருமிதத்துடன்! வாழ்த்துகிறோம்!!

வார இதழ் விலை அணு 1

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களும், அவ்வளவு பிற்போக்கில் இல்லை, அன்று புகழ்ந்தவர் இன்று ஏன் இகழ்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளக்கூடிய நிலையிலேதான் உள்ளனர்! நல்ல பலன் கொடுத்து வந்த மாமரம், தன் தோட்டத்து வரம்புக்கு அப்பாற்பட்டிருக்கிறது என்ற நிலை வந்ததும், கிடைத்து வந்த பலனை இழக்கவேண்டி நேரிடும் வருத்தத்தாலும் கோபத்தாலும், "செச்சே! அந்த மரம், நமக்கு இல்லாமற்போனதே நல்லதாகி விட்டது, ஏனெனில் அதிலே, சாரைசாரையாகக் கட்டெறும்புகள் இருந்து கொண்டு, தொல்லை தந்தன" என்று கூறிடும் தோட்டக்காரன் போல, திராவிடத்தின் காவலர் இருத்தலாகாது என்பதற்கே இதனைக் கூற நேரிடுகிறது.

*

2-ம் பக்கத் தொடர்ச்சி

கியங்கள், சுரண்டல்கள், சுகலாபங்கள் 'தூள்' ஆகிவிடும் என்ற பயன் காரணமாக! செப் 17 அன்று அட்லாண்டிக் சாசனத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் கூட்டம் நடைபெற்றிருக்கிறது.

அட்லாண்டிக் சாசனம்—அமெரிக்காவின் பொதுவுடைமை எதிர்ப்புச் சிருஷ்டிகளுள் ஒன்று இது! இச்சாசனத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் நாடுகள் மொத்தம் பன்னிரண்டாகும், அமெரிக்காவால் தயாரிக்கப்பட்ட இந்த உடன்பாடுகடந்த ஏப்ரலில் கையெழுத்தாயிற்று. இதில் கையெழுத்திட்டிருக்கும் நாடுகள் அமெரிக்கா, கானடா, பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து, லக்ஸ்ம்பர்க், நார்வே, டென்மார்க் இத்தாலி, போர்ச்சுகல், ஐஸ்லாந்து ஆகியவை. அட்லாண்டிக்மகா சமுத்திர வட்டாரத்தில் சேராத இத்தாலி, டேன்மார்க் கூட இந்த ஏற்பாட்டில் இழுக்கப்பட்டிருக்கின்றன! பெயர் தான் அட்லாண்டிக் உடன்பாடு, என்பதே ஒழிய, இதன் ஒரே நோக்கம் ஏதாவது ஒரு நாட்டுக்கு பிற நாட்டால் ஆகிரமிப்பு ஏற்படுமானல் ஆக்கிரமிப்புக்குள்ளான நாட்டுக்கு எல்லா நாடுகளும் உதவி செய்ய வேண்டும் என்பதாகும். இந்த உடன்பாட்டில் சேர்ந்திருக்கும் எல்லா நாடுகளும் ரஷ்யாவுக்கு அண்டை அயலிலுள்ளவை. இந்த உடன்பாட்டின் மூல காரணம் ரஷ்யா மீது ஏதாவது குற்றஞ் சொல்லி, போர் துவக்கப்படுமேயானல் பரஸ்பரம் பன்னிரண்டு நாடுகளும்முதலாளித்துவ கூடாரத்தில் நின்று போரிட வேண்டும் என்பதுதான்!

செப்டம்பர் 17 அன்று நடைபெற்ற இந்த 12 நாடுகளின் கூட்டத்தில் இந்த நாடுகள் எல்லாம் சேர்ந்து பொதுவாக ஒரு நிரந்தரப் பாதுகாப்பு ஏற்பாட்டைச் செய்து கொள்ளவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது, ஒரு நிரந்தர படை, இருக்கவேண்டும் என்பதுதான்!

* * *

முதலாளித்துவ முகாமிகள், ஒரு பக்கம் ரஷ்யாபற்றிய பிரச்சாரம் செய்துகொண்டு, இன்னொரு திசையில்படைபலத்தையும், அணுகுண்டுகளையும் தயார்செய்து கொண்டிருக்கின்றனர். இந்நிலையைக் கவனித்தால் பரிதாபமாக இருக்கிறது! இந்திய ஆட்சியும், முதலாளிகளின் கைப்பாவையாக ஆகிவிட்டகாரணத்தால், அமெரிக்க முதலாளித்துவத்துக்குச் சிரம் வணங்கி வருகிறது! அமெரிக்கக் கட்டுப்பாட்டிலிருக்கும் சர்வதேச பாங்கியிடம் கடன்! மார்ஷல் உதவி என்ற பேரால் கடன்!! வளர்கிறது இந்தியாவுக்கு. இந்நிலை இந்தியாவை, அமெரிக்கா தன் கைப்பிடிக்குள் கொண்டு வருவதே ஆகும்.

ஆசிய நாடுகளில் கம்யூனிஸம் வெகு வேகமாகப் பரவி வருகிறது. சீன சிவப்பாகிவிட்டது! இந்தோ—சீன 'எந்நேரமும்' வீழ்ந்து விடலாம்! பர்மாவிலே கிளர்ச்சி! மலேயாவிலே புரட்சி! எனவே, அமெரிக்காவுக்கு நம்பிக்கை மலர்ச்சிஉண்டாகச் செய்வதற்குள்ள நாடாக இருப்பது இந்தியாதான். இதை மனதில் வைத்தே, உதவி, சகாயம், நட்பு என்ற திரைமறைவில் இந்தியாவைத் தன் பிடிக்குள் சிக்கவைத்து வருகிறது—அமெரிக்க ஆதிபத்தியம்.

ரஷ்ய — அமெரிக்கக் கூடாரங்களிலே மோதுதல் ஏற்படுமேயானல் இந்தியா, முதலாளித்துவ முகாம் பக்கமே, இதன் காரணமாகச் சாய நேரிட்டால் ஆச்சரியப்பட முடியாது—நாம் எதிர்காலத்தில்!

* * *

முதலாளித்துவமும், பொதுவுடைமையும் உறுமிக்கொண்டே இருக்கின்றன. இந்தியாவோ, முதலாளித்துவப் பாதையில் போய்க் கொண்டிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபை என்ற ஒன்று இருந்தாலும், முதலாளித்துவ முன்னணிகள், வளர்ந்து வரும் ஏழைகளின் மலர்ச்சியை நசுக்குவதில் இருக்கிறார்கள்—அட்லாண்டிக் ஏற்பாடு போன்றவைகளால்!

அது மட்டுமின்றி, ஆசிய நாடுகளையும், ஒரு கூட்டு முன்னணியாக்கி, தங்கள் பக்கம் வைத்துக் கொள்ள பசிபிக் உடன்பாடு என்ற ஒன்றுக்கும் வித்தூன்றி, இந்தியா, முதலிய நாடுகளைத் தூண்டி வருகிறார்கள்! இதன் முடிவு போர்ப் பாதையில் போய் முடியவே செய்யும். அந்நிலை, முதலாளித்துவ—பொதுவுடைமை மோதுதல் உண்டானல், இந்தியாவின் எதிர்காலம் எப்படி அமையும் என்பதை நினைக்கவும் பயங்கரமாயிருக்கிறது!

7-ம் பக்கத் தொடர்ச்சி

விழைத்தர, அவன் வீச, அதுபட்ட
மாத்திரத்தில்,பால்டர், பிணமான
கடவுளர்கதறினர்.மகனை இழந்த
சேன், புரண்டழுதான். அனைவரு
கும் லாக் மீது சந்தேகம். அவனை
பகிஷ்கரித்தனர். லாக்கும் ஓடி
போய் குகை ஒன்றில் ஒளித்து
கொண்டான். தார்தேவன் அவனை
கைது செய்து, ஒரு பெரும் பாறை
யில் கட்டிப்போட்டு விட்டா
ஓடின் ஆணைப்படி, லாக்கின் முக
தின் மீது, கடும் விஷம் சொட்
சொட்டாக விழ, ஏற்பாடாகி: இரு
தது, விஷத் துளி பட்டதும் ல
துடிதுடிப்பான்; நெருப்பெனச்சு
விஷம் அது. இவ்வளவு கொடி
ஞன லாக்குக்கு ஒரு
தம பத்தினி இருந்தாள்—இந்
சாவித்திரி, சதா தன் பதி
பக்கம் வீற்றிருந்து, விஷத்
ஒரு கோப்பையில், பிடித்தப
இருப்பாளாம் — கணவன் மீ
விழாதபடி—கோப்பை நிரம்பிய
விஷத்தைக் கீழே கொட்டிவி
வரவேண்டுமல்லவா — அப்போ
சில துளிகள் லாக்கின் முகத்தி
விழுமாம்—தாங்கமுடியாத வேத
யுடன் துடியாய்த் துடிப்பா
லாக்கின் துடிப்புத்தான், பூகம்ப
இப்படி ஒரு நம்பிக்கை இருந்
ட்யூடானியருக்கு.

கலகமூட்டும் கடவுள் — கா
வடிவெடுக்கும் கடவுள்—புல்லு
யால் சாகும் கடவுள் — பூனை
தூக்கமுடியாத கடவுள் —
வேலை செய்யும் கடவுள்—கூந்
கத்தரிக்கும்கடவுள்—என்றுஇப்
கதைகளைத் தீட்டி, அவைகளை
ஆத்திகம் எனக்கொண்டு, அ
பட்டனர் ட்யூடன் மக்கள், அறி
தெளிவு ஏற்படாமுன்பு. பி
கண்டனர் சித்தத்தில் எவ்
பித்தம் இருந்தால், எத்தர்கள்
விட்ட இந்தச்சொத்தைச் சே
கடவுளின் கதையாகக்கொண்
முடிந்தது என்பதை—அருவரு
பிறந்தது—கேள்வி பிறந்தது—
னம் கிளம்பிற்று—மதவாதிகள்
கரித்தனர்-முடிதரித்தோர்கொ
செய்துபார்த்தனர் — பகுத்
பணியவில்லை — தாக்கிற்று இ
தகாத எண்ணங்களை — வெ
பெற்றது மிகுந்த கஷ்டத்
பிறகு—அந்த வெற்றியின்
லாக்தேவன், ஓர் மாஜி கடவுள்

கண்டனம் முரண்பாடு நிரம்பியது

கடமை ஆர்வம் கொள்வீர்!

4-ம் பக்கத்தொடர்ச்சி

ன்னும் சிலர் இருக்கிறார்கள், பெரியார் காங்கிரசில் ருந்தபோது காங்கிரசிலும், அவர் வேறுகட்சிஅமைத் போது அதிலும் ஈடுபட்டுப் பணியாற்றினவர்கள்—அப் டிப்பட்ட பலரும், 'ஒரு புதிய முடிவு' செய்யவேண் ய நிலை ஏற்பட்டது. துவக்கத்திலே கூறியபடி, ஐந்து தமான கருத்துக்கள் உலாவின—ஒன்றுக்கொன்று, ர்வத்திலே குறைந்ததல்ல—ஏறத்தாழ, ஒரே வித ான முறையில்!

திராவிடர்கழகத்திலே, தலைவருக்கும் என்போன்ற ணியாளர்களுக்கும், உள்ள தொடர்பு, மற்றக் கட்சிக லே ஒரு தலைவருக்கும் பணியாளர்களுக்கும் உள்ள தாடர்பு போன்றது அல்ல! இங்கு, ஒருவகைப் பாசம் -சுயமரியாதைக் கொள்கைப்படி தவறுதான் என்ற ாதிலும், ஏதோ ஓர் வகையான 'பக்தி'—ஏற்பட்டிருந் து. இதை யாரும் மறுக்கமாட்டார்கள்—பெருமையு ன் ஒப்புக்கொள்ளத்தான் செய்வார்கள். எனவே, மற் க் கட்சிகளிலே, தலைவருக்கும், அவர் உடனிருப்போ க்கும் 'தகராறு' ஏற்பட்டால், தொடர்பு உடனே அறு டுப்போய், தாக்குதல் துவங்கிவிடுவது போலன்றி, ங்கு, கண்ணீர்தான் சிந்தப்பட்டது. ஆச்சாரியாருக் ம் காமராஜருக்கும், காங்கிரசிலே போர் மூண்டு, இரு ப்பும் படைதிரட்டிக் கொண்டுப் பவனி வந்தபோது ருவரில் யாரும் அழுதிருக்க முடியாது—ஆனால் நாம் ழுதோம், வார்த்தை அளவிலல்ல—உண்மையாகவே. ந்த விதமான தொடர்பு வேறு கட்சிகளில் இல்லை— னவேதான், நான் இந்த நெருக்கடியான கட்டத்திலே ரு முடிவுக்கு வருவதற்கு, காலம் தேவைப்பட்டது பலருடைய பொறுமையைச் சோதிக்கும் அளவுக்குக் லம் தேவைப்பட்டது.

'தூற்றிவிட்டுப் போய்விடுவது' என்ற துடுக்குத் னமான திட்டம் என் மனதிலிருந்தால், இவ்வளவு ண்ணீர் சிந்தியிருக்கத்தேவையுமில்லை, காலத்தை இவ் ளவு கடத்தவும் தேவையில்லை,

துரோக சிந்தனை இருந்திருந்தால், இதையே சாக் க்க் காட்டிவிட்டு, வேறு கட்சிக்குஓடிவிட்டிருப்பேன்.

துடுக்குத்தனம், துரோகச் சிந்தனை என்பவைகள் லாததால்தான் இடர்மிகுந்த நிலையிலே, மூன்று களுக்கு மேலாக இருந்திட நேரிட்டது.

இந்தநேரத்திலே, நான் என்ன முடிவுக்கு வர ருக்கிறேன் என்பதை அறிய முயற்சிக்காமல், இயக்க ன்பர்கள் சிலர், தத்தமக்குத்தோன்றியவிதமாகவெல் ம் ஆரூடம் கணிக்கலாயினர்—சிலர் நேர்மையுடன், று சிலர் இச்சமயம் தவறினால் மறுசமயம் வாய்ப்ப து என்ற போக்கிலே. அவர்களின் பிரசார முறை ழய பாணி—இக்காலத்துக்குத் தேவைப்படுவதல்ல னினும் அதுதான் அவர்கள் அறிந்தது.

பெரியார் மீது படை எடுத்துத் தலைமைப் பீடத் ப் பறித்துக் கொள்ள மிக மிகப் பலமான, முயற்சி திட்டப்படி நடைபெறுவதாக, பிரச்சாரம் செய்யலாயினர்.

நானோ, நண்பர்களோ, எவ்விதமான முடிவுக்கும் வராமல் ஏக்கத்துடன் இருந்துகொண்டு, 'எம்மை இக் கதிக்கு ஆளாகவிட்டது ஏன்' என்று தலைவரிடம் முறை யிட்டுக்கொண்டிருந்த சமயத்திலே, அந்தப் பிரசாரம் நடைபெற்றது—ஏடுகள் மூலம்—துண்டு வெளியீடுகள் மூலம்—தூது மூலம்.

திருமணத்தை நிறுத்தாவிட்டால், அவருடைய தலைமையின் கீழிருந்து பணியாற்ற முடியாது என்று மட்டுமே அப்போது நானும் நண்பர்களும் முடிவு செய்து, கருத்து வெளியிட்டிருந்தோம், தீர்மான உரு விலும், அறிக்கை வடிவிலும்.

யாரும், இந்த நிலையைப் பற்றிக் கலந்துபேசி, சிக் கலைப்போக்க முயற்சிக்கவும் இல்லை.

கடந்த ஜெர்மன் சண்டையின் போது, நாஜிகள், ஒரு புதுமாதிரி வெடி வீசினர்—பயங்கரமான கூச்ச லைக் கிளப்பிவிடுமாம் அந்தக் குண்டு—அது விழுந்த உடனே, மக்கள் அலறி, 'என்னமோ ஏதோ' என்று ஓடுவாராம்—ஒரு ஆளையும் கொல்லாது, ஒரு கட்டிடத் தையும் இடித்துத் தள்ளாது அந்தக் குண்டு—ஆனால் மக்கள் மனதிலே ஒரு மிரட்சியை உண்டாக்கும். Screaching Bomb —கூவும் குண்டு—என்று அதற்குப் பெயர்.

அதுபோல, "ஐயோ! அநியாயம், அக்ரமம்! பெரி யார்மீது பாய்கிறார்களே! அவரைத் தலைமைப்பீடத்தி லிருந்து கவிழ்த்துவிடப்போகிறார்களாமே! வாருங்கள்! ஒன்று சேருங்கள்! ஆபத்தைப்போக்குங்கள்! அவசர மாகக்கூடுங்கள்!" — என்று முழக்கமிட்டனர், முடி போட்டுவிடுவோர். பெரியாரின் திறமை, தொண்டு, அவரால் நாடும் மக்களும் அடைந்த நன்மை, இவை களைப்பற்றிய பட்டியலைத் தீட்டிக்காட்டினர். அவர் அருங்குணங்களைப்பற்றிய அர்ச்சனைகளை, உருக்கமாகக் கூறினர். இவ்வளவும், அவர்மீது பாய்வதற்குப் பெரிய தோர் ஏற்பாடு இருப்பதாகப் பயங்காட்ட!! ஏன்? இப் படி முதலிலே கூறினால்தான், பிறகு, "இதுகள் என்ன செய்யமுடிந்தது?" என்று கேலிபேசலாம். இந்த அற்ப சந்தோஷத்தைப் பெறுவதற்காக, அலறல்குண்டு வீசி னர். அதுமட்டுமா?

திருமணம் என்ற பிரச்னை கிளம்பியதால்தான், நானும், நண்பர்களும், பெரியார் போக்கைக் கண்டிக்க முன்வந்தோம் — காரணத்தோடு — நாங்கள் மனதார நம்பியதால்.

இந்தக்கண்டனம், கருகிவிடும் என்று எண்ணிக் காத்திருந்தனர் சிலநாள். விளக்கம், தெளிவு, என்று பொதுப்படையாகத் தீட்டிப்பார்த்தனர். பலிக்கவில்லை. நாளுக்குநாள், கண்டனம் வலுத்தது, எனவே, எந்தத் திருமணத்தால், இந்தக்கண்டனம் ஏற்பட்டதோ, அதை பின்னணியில் தள்ளினால்தான் நல்லது என்று தோன் றிற்று—தோன்றவே, நானும் திருமணத்தின் காரண மாகப்பெரியாரின் போக்கைக் கண்டித்தவர்களும், 'எப்

சுருண்டு வரும் முரண்பாடுகள்

'ஒழிந்ததுகளை'ப் பற்றி ஓயாமல் சிந்தனை ஏன்?

படிப்பட்டவர்கள்' என்று கழகத்தினருக்குக் காட்டும் வேலையில் ஈடுபட்டனர் — எங்கள்மீது குற்றச்சாட்டுகளைத் திணிக்கலாயினர்.

சாதாரணவழக்கு மன்றங்களிலேகூட, ஒருவர் இன்னொருவர்மீது குற்றம் காட்டி வழக்குத்தொடுத்தால், அதற்குப்பிறகு, வழக்குத் தொடுத்தவர்மீது, குற்றம் சாட்டப்பட்டவர், ஒரு எதிர்வழக்குத்தொடுப்பதுண்டு—ஆனால், அதை வலிவுள்ளதாக மதிக்கமாட்டார்கள்.

பொதுவாழ்க்கைத்துறையிலும், இப்படி எதிர்வழக்குத் தொடுப்பது, பலஹீனத்தின் அறிகுறி என்றே தெளிவுள்ளோரால் கருதப்படும்.

திருமணத்தையொட்டி பெரியார் மேற்கொண்ட போக்கு, தவறானது, கொள்கைக்கு முரணானது, பொதுமக்கள் கழகத்தைப்பற்றிக் கேவலமாகக் கருதும்படி செய்யக்கூடியது, ஜனநாயகத்துக்கு உலைவைக்கும் காரியம், கழகத்தோழர்களின் தன்மானத்தைத் தகர்க்கக்கூடியது என்பது, இந்தப் பிரச்னையின்போது வெளியிடப்பட்ட கருத்துகள்.

இவைகளை, எதிர்ப்புகள் — குற்றச்சாட்டுகள் — என்று கருதினாலும், இவைகளுக்குத்தக்க விளக்கமும், மறுப்பும், தெளிவும் தருவதுதான் முறையாகுமேதவிர இவைகளைக் கூறுபவர்கள் எப்படிப்பட்டவர்கள் தெரியுமா என்று எதிர்வழக்காடுவது, நேர்மையுமல்ல, பொருத்தமும் ஆகாது.

நெடுநாட்களாக நயவஞ்சகர்களாகவே இருந்தவர்கள்—என்று குற்றம் சுமத்துகிறார்கள் — எப்போது? திருமணத்தையும் அதைத்தொடர்ந்து பெரியார் கொண்டபோக்கையும் நாம் கண்டித்தானபிறகு!! பொருந்துமா? கழகத்தோழர்களிலே சிலருக்குக்களிப் பூட்டப்பயன்படும் — பொதுமக்கள், என்ன எண்ணுவார்கள்—என்ன எண்ணுகிறார்கள்!

திருமணம் செய்துகொண்டார் தலைவர்—அதுசரியல்ல என்று கழகத்தவர் கூறுகின்றனர் — குறை கூறுபவர்களைச் சமாதானம் செய்யமுடியாததால் ஏதேதோ அவர்கள்மீது குற்றம்சாட்டி, தன்குற்றத்தை மறைத்துக்கொள்ளப்பார்க்கிறார் என்பதுதான் பொதுமக்கள் தீர்ப்பு.

அதிலும் எதிர்வழக்காடுபவர்கள், வெளியிட்டிருக்கும் குற்றச்சாட்டுகள், ஒன்றுக்கொன்று, எவ்வளவு முரண்பட்டவை!! பொருளற்றவை!!

1. நானேஇவர்களை எல்லாம் விரட்டலாம் என்று திட்டமிட்டிருந்தேன், எனவே இப்போது ஓடிவிட்டனர், நானாக ஓட்டுவதற்குள்.

2. இவர்கள் ஓடினது, கழகத்துக்குநல்லதுதான்—சனியன் விட்டது!

3. கழகத்தைப் பலஹீனப் படுத்துகிறார்கள் இக்கலகக்காரர்கள் தனியாகப்போனதன் மூலம்.

4. தேர்தலில் கழகத்தை ஈடுபடச்செய்வதற்காகக் கழகத்தைக் கைப்பற்ற முயற்சிக்கிறார்கள்.

5. காங்கிரசுடன் குலவ, உள்ளெண்ணம்கொண்டு கழகத்தைக் கைப்பற்ற முயற்சிக்கிறார்கள்.

6. பார்ப்பனத் துவேஷி என்ற பட்டம் சூட்டப்படுகிறது கழகத்துக்கு, அதற்குப் பயந்து கொண்டு ஓடுகிறார்கள் வெளியே.

7. காங்கிரசே இவர்களைத் தூண்டிவிட்டு விடுகிறது.

8. காங்கிரசுக்கு எதிராகத் தேர்தலில் நிற்க நான் இடந்தரமாட்டேன் என்பது தெரிந்ததும் எப்படியாவது சட்டசபை புகவேண்டும், தேர்தலுக்கு நிற்க வேண்டும் என்று ஆசைப்பட்டுக்கொண்டு வெளியே போகிறார்கள்.

9. இதுகள் ஒழிந்தது நல்லதுதான்.

10. இதுகள் தனிக்கழகம் நடத்தித் தொலைக்கட்டும்—நாணயஸ்தர்களாக இருந்தால், இதுகளும் ஏதோ செய்யக்கூடும்,

11. இதுகள் தனிக் கழகம் வைத்திருப்பது நாச வேலை—திராவிட கழகத்தை ஒழிக்கும் சூழ்ச்சி.

12. தலைமை பிடிக்கவில்லை, கொள்கை பிடித்தம் தான் என்று பசப்புகிறார்களே, தலைமையை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், கொள்கைக்காகப் பணி புரிவது தானே!

13. தலைமையை எற்றுக்கொள்ள் முடியாதவர்கள், கழகத்தை விட்டுவிலகுபவர்கள், ஏன் புதிதாகக் கொள்கைகளை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது? பழைய கொள்கைகளைப் பேச இவர்கள் யார்?

14, திராவிடர் கழகம் தீவிரமான போராட்டத்தில் ஈடுபடப் போகிறது—சிறைகளை நிரப்பப் போகிறோம்; அதற்குப் பயந்துகொண்டு வெளியே ஓடுகிறார்கள்.

15. புதுக் கழகத்துக்கு விளம்பரம் தேட, 'தியாகி' 'வீரன்' என்று பெயர் எடுக்க, போர், தீவிரத் திட்டம் என்றெல்லாம் பேசுகிறார்கள். இவர்களின், தீவிரத் திட்டம் ஒரு சூழ்ச்சி — சர்க்காரே கிளப்பி விடுகிறது.

16. சர்க்கார் திராவிடர் கழகத்தை ஒழிக்க பெரியாரை, உடுமலை கேசிலும், ஐலண்டு கிரவுண்டு பேச்சுக்காகவும், கைது செய்து சிறைப்படுத்தப் போகிறது; அந்தச் சமயமாகப் பார்த்து இந்தச் சூழ்ச்சிக்காரர்கள் கழகத்தைக் கைப்பற்றக் கிளம்புகிறார்கள். 'ஐயோ' என்று அலறியபடி, பெரியார் சிறை செல்லப்போகிறார்.

17. திராவிடர் கழகத்துக்குச் செல்வாக்கு வரக் கூடாது என்பதற்காகவே, சர்க்கார் பெரியார் மீது இருந்துவந்த வழக்கை வேண்டுமென்றே வாபீஸ் வாங்கிக் கொண்டனர்.

நாட்டு நிலையைக் காணுங்கள்

நல்லறிவுப் பணி புரியுங்கள்

இப்படிச் சுருண்டு சுருண்டு, வருகிறது, முரண்பாடுகள்!! ஒழிக்க இருந்தேன்—என்று கூறுவதிலே உண்மை இருந்தால், 'ஒழிந்ததுகளை'ப் பற்றி ஓயாமல் சிந்தனை ஏன், நாள்தோறும், 'அர்ச்சனை' எதற்கு?

புதுக்கழகம், சர்க்காரின் சிருஷ்டியானால், அந்தப் புதுக்கழகம், காங்கிரசை எதிர்த்துத் தேர்தலுக்கு நிற்கப்போகிறது என்ற கூற்றுப்பொருந்துமா?

பெரியார்மீது சர்க்கார் வழக்குத்தொடுத்துச் சிறைக்கு அனுப்ப எண்ணுவது திராவிடர் கழகத்தை ஒழிக்கும் திட்டம் என்பதிலே உண்மை இருந்தால், திராவிட முன்னேற்றக்கழகத்திலேயுள்ள என்னையும் வேறுசிலரையும் சர்க்கார் கைது செய்வது என்றுதிட்டமிட்டால், அது முன்னேற்றக்கழகத்தை முளைக்கும் போதே, அழிக்க எண்ணும் திட்டமாகத்தானே இருக்க முடியும்! பிறகு எப்படி இதைமட்டும், சர்க்கார் கலகத் தலைவனை, வீரன், தியாகி, ஆக்குவது இது, என்று கூறுவது. பொருந்துமா!!

இப்படியே ஒவ்வொன்றும் தனித்தனியே பார்த்தால் பொருளற்றது, ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்த்தால் பொருந்தாதவை முரண்பாடுள்ளவை, மொத்தத்தில் பார்க்கும்போது, குற்றத்தை மறைக்கத் தயாரிக்கப்பட்ட எழுத்துத்திரை — ஏதிர் வழக்கு! எனவேதான், இவைகளைப்பற்றி நாம் கவலைப்பட மறுக்கிறோம்.

✲

நான் கூறியபடி, மிக மிகத்தீர ஆலோசித்தபிறகே திராவிட முன்னேற்றக் கழகம் என்ற தனி அமைப்பு ஏற்படுத்தி அதிலே பணிபுரிவது என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். அதற்கான ஆதரவின் அளவையும் தன்மையையும் காணும்போது, கோபமும் சோகமும்தாக்குகிறது—எனவே கண்டனம் உருண்டோடி வருகிறது! கலகவிதையைத் தூவவும் திட்டமிருக்கக்கூடும். நாம் இவைபற்றிக் கவலைப்படத்தேவையில்லை. நம் மனதிலே, தூய்மை இருக்கிறது, அது போதும். நமது சிந்தனையிலே, தளை இல்லை, அது பெரியதோர் வாய்ப்பு. நமது செயலிலே, சுயநல வாடை இல்லை, எனவே, தடுமாற்றம் ஏற்படக் காரணம் இல்லை. நாம் எதையும் இழந்துவிடவில்லை, பதற! எதையும் எதிர்பார்த்து ஏமாந்துவிடவில்லை, பதைக்க! எனவே திராவிட முன்னேற்றக் கழகங்களை, ஆங்காங்கே அமைத்து, நல்லறிவுப் பணி புரிய, வாரீர் என்று திராவிடத் தோழர்களை அழைக்கிறேன். ஏற்கெனவே ஆர்வம்காட்டி, பணியில் ஈடுபட்டுள்ள தோழர்களுக்கு என் நன்றி—.

கலக உணர்ச்சியைக் களைந்தெறியுங்கள்—கண்டிக்கப்பட்டால், காதிலே அவை புக இடந் தராதீர்கள்—குடைந்துகொண்டு உள்ளே புகினும், நெஞ்சிலே அவை நிற்க இடந்தராதீர்கள். அவரிடம் பற்றும் பாசமும் கொண்டிருப்பதைக் காட்டுவதற்காக, நம்மிடம் கோபமும் கொதிப்பும் காட்டித்தான் தீரவேண்டும் என்ற தவறான போக்கிலே எல்லோரும் இருந்துவிடமாட்டார்கள்—சில இடந்தேடிகள் அதுபோலிருப்பர், மற்றவர்கள், திண்டுக்கல் தோழர் மத்திரன் கூறியது போல, "நான் பெரியாருடன்தான் இருக்கிறேன், எனினும் நான் திராவிட முன்னேற்றக்கழகத்தின் விரோதியல்ல" என்று கூறும், கண்ணியத்துடனேயே இருப்பார்கள் என்று நான் திடமாக நம்புகிறேன்.

திராவிடர்கழகத்திலே நீக்கமுடியாத பிளவு வந்துவிட்டது, பெரியார் கட்சி என்றும் பிறர் கட்சி என்றும் ஏற்பட்டுவிட்டது. நான் பெரியார் கட்சிதான்—ஆனால் இரண்டு கட்சிகளும் திராவிட நாட்டுப் பிரிவினைக்கே பாடுபடும், எனவே இரண்டும் வேலை செய்வது நல்லதுதான்" என்ற கருத்துப்பட, பல நாட்களுக்கு முன்பே, தோழர் திருச்சி வேதாசலம், ஒரு கடிதத்தில் தீட்டியிருந்தார். அது போன்ற பண்பு பலருக்கு இருக்கும். சிலருக்கு, 'சில்லுண்டித்தனம்' வாழ்க்கை வழியாக அமைந்துவிட்டது. அவர்களின் சிற்றமொழியைக் கவலையுடன் கவனிக்கவேண்டாம். நாட்டு நிலையைக் கவனித்து, நமது பணியினைத் திறம்படச் செய்ய முன்வாருங்கள். திராவிட கழகத்தின், முன்னணியினராக இருந்தவர்களிலே பெரும்பாலோராகிய நாம்; ஒரு முகாமில் இருக்கிறோம் என்பதை மறவாதீர்கள். இவ்வளவு 'வலிவும்' ஒரு சில இடந்தேடிகளின் போக்கை எதிர்க்கப் பயன்பட்டுப் பலன் இல்லை. அவர்களை அல்ல, நாம் கவனிக்கவேண்டியது, நாட்டை அரிக்கும் கொடுமைகளை, சமுதாய இழிவுகளை. இவைகளுடன் கடும் போரிடவேண்டும். அதற்கான ஆற்றலும் நம்மிடம் நிரம்ப இருக்கிறது, வாய்ப்பும் கிடைக்கிறது. இதை அறிந்து பணியாற்ற வாரீர் என்று அழைக்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகத்திலே சேரும் நோக்கமுடையவர் அனைவரையும். என் வாழ்க்கையில் நான், எடுத்துள்ள, இந்த இரண்டாவதுமுடிவு, என் சொந்தப் பலத்தையே நம்பியது அல்ல—கூட்டு உழைப்பை—நம்பியது. கூடி இருக்கும் நாம்,இன்று, எவ்வளவுதான் பொருத்தமற்ற முறையிலும் காரணமற்ற வகையிலும், குறை கூறப்பட்டாலும், அவராலேயே, "தளபதிகள் — ரெத்தினங்கள் — மாணிக்கங்கள்" என்று அழைக்கப்பட்டவர்கள் தான்! அவரையும் நாம் பெரியார் என்றோம் அன்று—இன்றும், அந்தப் பாசம் மறக்கவில்லை—பண்பை இழக்கவில்லை—அவர் நம்மை இன்று, 'சனியன்கள்' என்கிறார், பரவாயில்லை—அவர் நம்மைக் குறை கூறுவதைப் பற்றிக் கவலை கொள்ள வேண்டாம்—அவர் மனம், நம்மைக் குறை கூறுவதனால் சாந்தியும் சந்துஷ்டியும் பெறுவதானால், அந்த ஆசையும் தீர்ந்து போகட்டும் — நம்மைப் பற்றி திராவிடச் சமுதாயத்தைப் பற்றி, நாட்டைப்பற்றி, வைதீகவக்கிரங்களும்; பாசிசவெறியர்களும், எவ்வளவு கேவலமாகக் கருதுகின்றனர், கூறுகின்றனர் என்பதைக்கவனித்து அந்த இழிநிலையைப் போக்கப் பாடுபட முனையுங்கள், அந்தவேலை நிரம்ப இருக்கிறது! அதிலே ஈடுபடுவோம்—சில்லறையில் சிந்தனையைச்செலவிடவேண்டாம்.

அண்ணாதுரை.

★ படிப்பகம் ★

[மதிப்புரை வேண்டின் இருநூல்கள் அனுப்புக]

வால்காவிலிருந்து கங்கைவரை

ஆசிரியர்:- ராகுல சாங்கிருத்தியாயன்

கி. மு. 6000 லிருந்து கி. பி. 1942 வரை மனித சமுதாயம் எப்படி வளர்ந்தது, வால்காவிலிருந்து கங்கை வரை எப்படி அவர்கள் பரவினர், இந்தோ—ஆரியர் நுழைவு இங்கு ஏற்பட்ட வகை — அது வளர்ந்த நிலை, ஆகியவைகள் இருபது கதைகளாகக் கொண்டு சித்தரிக்கப்பட்டுள்ளது 290 பக்கங்கள் கொண்ட இந்நூலில் பேராசிரியர் ராகுல்ஜியால்.

நாகரிக உச்சியில் நிற்கும் மனித சமுதாயத்தின் ஆதிநிலை, அது வளர்ந்தவகை குறித்த ஒவ்வொரு கதைகள் கொண்ட படிக்கட்டுகளால் கட்டப்பட்ட ஆராய்ச்சிக்கூடம் இந்நூல்.

பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்ட இந்நூல் இப்போது தான் தமிழ் மொழியில் உருவாக்கப்பட்டிருக்கிறது தோழர்கள் கண. முத்தையா, ஆ. ஞானசூரபரன் ஆகியோரால். பாராட்டுக்குரிய முயற்சி. எளிய தமிழ்நடை.

வீட்டிற்கொன்று இருக்கவேண்டிய, அறிவுலகுக்குப் பயனூட்டக் கூடிய, நூல் இது!

விலை ரூ 5—0—0

பெறும் இடம்:— தமிழ்ப் புத்தகாலயம் மயிலாப்பூர் சென்னை.

* * *

ஜி. டி. நாயுடு (வரலாறு)

ஆசிரியர்:— டி. எம். முத்து.

எஃகு உள்ளம், இடைவிடா முயற்சி கொண்ட ஆராய்ச்சி மன்னர் கோவை ஜி. டி. நாயுடு அவர்கள் வாழ்க்கைத் துளிகள் அடங்கிய நூல் இது. ஏழ்மை, முரட்டுத்தனம் இவைகளுடன் பிறந்து, பின், தன் விடாமுயற்சியால் விஞ்ஞான மன்னன் ஆகி இன்று ஒளி வீசி நிற்கும் அவரது வாழ்க்கை எதிர்கால உலகமாகிய இளைஞர்கள், அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்!

பெறும் இடம்:— திராவிட மணி பதிப்பகம், தெப்பக்குளம், திருச்சி. விலை 0—12—0

* * *

திருக்குறள் இசைப் பாடல்கள்

ஆசிரியர்:— பாவலர் தோ. ப. வேலாயுதசாமி.

அறத்துப்பாலின் அதிகாரங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குறள் எடுத்து, அது விரவிவரும்படியாக வைத்து, எளிமையாக, கேட்போர் மகிழும் வண்ணம் பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இசைக் கலைஞர்களுக்கேற்ற நூல். புது முயற்சி; நல்ல வெற்றி!

விலை 0—8—0

பெறும் இடம்:- தென்றல் நூற்பதிப்புக் கழகம், சலகண்டபுரம். (சேலம்)

* * *

காதல் உள்ளம்

ஆசிரியர்:— சாமி பழனியப்பன்.

காதல் உள்ளம்—ஒரு வேதனைக் குகை! வேதனைகளைத் தேன் கவிதைகளாகத் தந்துள்ளனர் நமது பழந் தமிழ்க் கவிஞர்கள். அவைகளில் சிலவற்றை எடுத்து, அழகாகப் படம் பிடிக்கப்பட்டிருக்கிறது இந்நூலில்.

விலை 0—6—0

பெறும் இடம்:— பைந்தமிழ்ப் பதிப்பகம், காரைக்குடி.

அஞ்சலை

ஆசிரியர்:— தில்லை வில்லாளன்.

பண்ணையாள் மகள் அஞ்சலை மிராசுதார் மகன் அரசப்பனுக்கு மனைவியாகிறாள். எப்படி, என்பது விளக்கப்படுகிறது இச்சிறு நூலில்.

விலை 0—4—0

பெறும் இடம்:— தென் துருவம் 29, நாட்டுப்பிள்ளை தெரு சிதம்பரம்.

* * *

திருப்பூர் தியாகி குமரன்

ஆசிரியர்:— ஈரோடு மு. சுப்பையன்

இலட்சிய நிறைவேற்றத்துக்காகப் பலியான இளம் வீரன் குமரன், தடியடி தாக்கத் தாக்க 'வந்தே மாதரம்' என்ற முழக்கத்துடன், மூளை சிதற, தெருவில் வீழ்ந்தான்—பிணமாக! அவன் நினைவுகூட பதவிவேட்டைக் கூடமாகிவிட்ட காங்கிரஸ் தலைவர்களிடம் இன்று இல்லையே! என்ற இதய ஒலியின் விளைவு இந்நூல்.

விலை 0—6—0

பெறும் இடம்:— ஜம்னா நிலையம், 6/330 நேதாஜி ரோடு, ஈரோடு.

* * *

கலைக் கோயிலா? விபசார விடுதியா?

ஆசிரியர்:— 'சேரன்'

'சினிமா வானிலே ஒரு போது மின்னிய நட்சத்திரம், கடைசியில் புழுதிமேட்டிலே கவனிப்பாரற்றுக் கிடக்கும்படியாய் விடுகிறது! இது ஏன்? என்பதன் விளக்கம் இந்நூல்.

விலை 0-4—0

பெறும் இடம்:— கலைப் பண்ணை, சூளை, சென்னை. 7

* * *

கழுதை ஊர்வலம்

ஆசிரியர்:— தில்லை வில்லாளன்.

'நீல நிலவு' என்ற கருத்துக் கலந்த கற்பனைக் கதை, 'கழுதை ஊர்வலம்' என்ற சரித அடிப்படை கொண்ட கதைகள் அடங்கியுள்ளன. வளரும் தமிழ் நடையில், கதைகள் இருக்கின்றன, சுவையுடன்!

பெறும் இடம்:— எரிமலைப் பதிப்பகம், துறையூர் திருச்சி விலை 0—8—0

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street, Kancheepuram.